பக்கங்கள்:19
விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 05 ஞாயிற்றுக்கிழமை 21.08.2022 கதிர் 288

**இது ரகசியம் அல்ல!**

எரிபொருள் விநியோகத்துக்கான 'கியூ.ஆர். கோட்' முறைமை மிகப்பெரும் வெற்றி என்கின்றது அரசு.

ஆனாலும் அதிலும் ஓட்டைகள் உண்டு.

நம் நண்பர் ஒருவர் விவசாயத் தேவைகளுக்காக ☞2

# அரசுக்கு எதிராகக் கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கைது நடவடிக்கை, பொருட்களின் விலையேற்றம் உள்ளிட்ட பல்வேறு விடயங்களைக் கண்டித்து தேசிய மக்கள் சக்தி கொழும்பில் நேற்றுப் பிற்பகல் ஆர்ப்பாட்டப் பேரணியை முன்னெடுத்தது.

நுகேகொடை சந்தியில் ஆரம்பமான ஆர்ப்பாட்டப் பேரணி விஜேராம சந்தி வரைச் சென்றது.

இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் அரசுக்கு எதிரான கோஷங்களை எழுப்பினர்.

அத்துடன் 'பொருள்களின் விலை வானத்தை நோக்கி; மக்கள் சட்டியிலிருந்து அடுப்பை நோக்கி', 'மக்களின் சிக்கல்களுக்கு அடக்குமுறையால் தீர்வு தேடுவதைக் கண்டிகின்றோம்' உள்ளிட்ட வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளையும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் ஏந்தியிருந்தனர்.



# இலங்கைக்கு வருவதை ஒத்திவைத்தார் கோட்டா

## ரணிலுடன் தொலைபேசியில் உரையாடல்



இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இம்மாத இறுதியில் நாடு திரும்புவார் என முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்தாலும், அவரின் வருகை அடுத்த மாதம் (செப்டெம்பர்) வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தொலைபேசி உரையாடலின் பின்னரே, கோட்டாவின் வருகை பிற்போடப்பட்டுள்ளது. ☞2


# பலாங்கொடை தாக்குதலில் 6 பேர் காயம்; நால்வர் கைது



பொகவந்தலாவ பகுதியில் இருந்து பலாங்கொடைக்குத் தொழில் நிமித்தம் சென்றவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில் நால்வர் ☞2

## ரணிலின் வீடு எரிப்பு:

# சஜித்தின் சகோதரி நேற்று வாக்குமூலம்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வீடு தீக்கிரையாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் சகோதரி ☞2



## இனி இது........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிராக்டர்கள், பெட்டிகளை வைத்திருப்பவர். எரிபொருள் தட்டுப்பாட்டில் எப்படி வேலை போகின்றது என்று அவரிடம் விசாரித்தேன்.

அவர் ஒரு நமுட்டுச் சிரிப்புச் சிரித்தார். "கியூ.ஆர். கோட் முறையில் எங்களுக்கு 'டபுள் கோட்டா'. அதனால் வாசி" - என்றார் அவர்.

எனக்கு விளங்கவில்லை. அவர் விளக்கினார்.

"இதை எழுதி, அம்பலப்படுத்தி எங்களுக்கு ஆப்பு வைத்து விடாதீர்கள்!" - என்றார். ஆனால் என் கை விடுவதாக இல்லை. துரு துருத்தது. எப்படியும் எழுதி விடத் தூண்டுகின்றது. அதனால் எழுதி விட்டேன். நண்பர் கோபிக்காமல் இருப்பாராக!

டிராக்டர்களைப் பொறுத்தவரை அவற்றின் இயந்திரத்துக்கு ஒரு பதிவு. பெட்டிக்குத் தனியான பதிவு. இரண்டுக்கும் ஒவ்வொரு வாகன இலக்கங்கள்.

இதனால் இயந்திரத்தைத் தனியாகவும், பெட்டியைத் தனியாகவும் பதியும் போது இரு வேறு கியூ.ஆர். கோட் பதிவுகள் கிடைக்கின்றன.

எத்தனை கோடி வாகனங்கள் நாட்டில் இருந்தாலும் அவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பதிவுதான். ஆனால் டிராக்டருக்கு மட்டும்தான் இயந்திரத்துக்கு ஒன்று, பெட்டிக்கு ஒன்று என இரட்டைப் பதிவுகள். அதனால் வாராந்தம் இரட்டைக் கோட்டா.

டிராக்டர்களை வைத்திருப்பவர்கள் பலரும் விவசாயிகள். அல்லது விவசாயத் தேவைக்கு அவற்றைப் பெரும்பாலும் பயன்படுத்துபவர்கள். அதனால் அவர்களுக்கு இரட்டைக் கோட்டா கிடைப்பது குறித்து நாங்கள் பொறாமைப்படாமல் இருப்போமாக!

* * *

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ் மாவட்டக் கிளைக் கூட்டம் இன்று முற்பகல் நடக்கின்றது.

கட்சியின் பல மூலக்கிளைகள், தொகுதிக் கிளைகள் புனரமைக்கப்படாமல் இருப்பதால், கட்சியின் தேசிய மாநாடு நடத்தப்படாமல் கடந்த மூன்று வருடங்களாக இழுபடுகின்றது. அது பற்றி ஆராய்வதுதான் கூட்டத்தின் நோக்கம். ஆனால் கூட்ட நிகழ்ச்சி நிரலில் ஒரு விடயம் உள்ளது.

அது - 'தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பாக கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவின் உரை' என்பதுதான்.

கூட்டத்துக்குப் போக வேண்டிய நண்பர் ஒருவர் நிகழ்ச்சி நிரலில் அந்தப் பகுதியை வாசித்துக் காட்டி விட்டு "நாளைக்கு (இன்று) இரண்டு மணி நேரம் வேஸ்ட்" - என்று நேற்றுத் தொலைபேசியில் விசனப்பட்டுச் சலித்துக் கொண்டார்.

சிலருக்கு 'மைக் என்றால் மைசூர் பாகுதான்'! என்ன பேசுகிறோம், ஏது பேசுகிறோம், எவ்வளவு நேரம் பேசுகிறோம், எதைப் பற்றி, யாருக்குப் பேசுகிறோம் என்ற விவஸ்தையே தெரியாமல் அலட்டிக் கொண்டிருப்பார்கள். அவரவர் தலையெழுத்து எனச் சகித்துக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

பாவம் தமிழரசு கட்சி...!

**- மின்னல் -**

## பலாங்கொடை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னவல பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொகவந்தலாவ கெம்பியன் பகுதியை சேர்ந்தவர்களே இவ்வாறு தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர்.

பலாங்கொடை ஆடைத்தொழிற்சாலை ஒன்றுக்குத் தொழிலுக்குச் சென்று மீளத் திரும்பியவர்கள் மீது நேற்றுமுன்தினம் இரவு பலாங்கொடை மாரதென்ன தோட்டப் பகுதியில் வைத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் 6 பேர் காயமடைந்துள்ளனர் எனவும், அவர்களில் ஐவர் பலாங்கொடை வைத்தியசாலையிலும், ஒருவர் இரத்தினபுரி வைத்திய சாலையிலும் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் பின்னவல பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்கள் பயணித்த பஸ்ஸை பலாங்கொடை மாரதென்ன தோட்டப் பகுதியில் வைத்து மறித்து சிலர் தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

இந்தநிலையில் தாக்குதலுக்கு இலக்கானவர்கள் அருகில் இருந்த வீட்டுக்குள் நுழைந்த நிலையில் வீட்டின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதையடுத்து சம்பவத்துடன் தொடர்புடைய 4 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டு நேற்று நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டமையை அடுத்து அவர்களை எதிர்வரும் 24ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பின்னவல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சஜித்தின் சகோதரி ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துலாஞ்சி பிரேமதாஸ நேற்று கொழும்பு குற்றவியல் விசாரணை திணைக்களத்துக்குச் சென்று வாக்குமூலமளித்தார்.

இதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துரைத்த அவர்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வீடு தீக்கிரையாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் வாக்குமூலமளிப்பதற்காக நான் இன்று (நேற்று) கொழும்பு குற்றவியல் விசாரணைத் திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டேன்.

ஜனாதிபதி ரணிலின் வீடு தீக்கிரையாக்கப்பட்ட அன்று ஆர்ப்பாட்ட இடத்தில் நானும் நின்றிருந்ததால் விசாரணைக்காக என்னை அழைத்திருந்தனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறே கோரினர்.

அதற்கமைவாக நான் எனது பதிலை வழங்கினேன். மிகவும் சுமுகமான முறையில் விசாரணை இடம்பெற்றது.

வாக்குமூலமளித்த பின்னர் விசாரணை எனது விசாரணை முடிவுற்றது. எவ்வித பிரச்சினையும் இருக்கவில்லை.

ஒவ்வொரு போராட்டங்கள் உள்ளன. போராட்டம் என்பது ஒரு போராட்டம் மட்டுமல்ல. ஒவ்வொருவரும் தனிப்பட்ட ரீதியிலேயே போராட்டங்களை முன்னெடுத்தனர்.

வாக்குமூலமளிப்பதற்காக வருமாறு கூறியபோது நான் வந்து வாக்குமூலம் வழங்கினேன். அதில் எவ்வித பிரச்சினையும் இல்லை - என்றார்.

## இலங்கைக்கு வருவதை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேவேளை, கோட்டாபய ராஜபக்ஷவின் வீடு அமைந்துள்ள மிரிஹான பகுதியிலும், அதனைச் சூழவுள்ள பகுதியிலும் பாதுகாப்பு ஏற்பாடுகளை அதிகரிக்குமாறு பொலிஸார் மற்றும் புலனாய்வு அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதியின் வீட்டைச் சுற்றியுள்ள பகுதிகள் விசேட கண்காணிப்பில் வைக்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.





## இது ஒரு வர்த்தக விளம்பரம்

அரசியல் பொருளாதார சீர்கேடுகளால் நாடு நலிவுற்றிருக்கிறது. இந்நிலையில் இளைஞர்கள் அரச தொழிலை எதிர்பார்க்க கூடாது. உள் நாட்டிலோ வெளி நாட்டிலோ தொழில் தேட வேண்டும் அல்லது சுய தொழில் ஆரம்பிக்க வேண்டும். இரண்டுக்கும் தொழில் தகைமையை வளர்த்துக்கொள்ள வேண்டியது அவசியம். கல்லூரியும் பல்கலைக்கழகமும் அடிப்படை கல்வியை தான் தருவார்கள். தொழில் கல்வி, தொழில் பயிற்சி, இவை தொடர்பான வேலை அனுபவம் சேரும் போது தான் தொழில் தகைமை வளரும்.

தொழில் கல்வி. தொழில் பயிற்சி, பிரதானமாக வேலை அனுபவம் பெற நம் நாட்டில் வசதிகளில்லை. இந்தியாவில் இப்பயிற்சிக்கான வாய்ப்புகள் நிறைய உண்டு. இந்தியாவில் பயிற்சி பெற்ற ஒட்டுனர்கள் ( welders) மற்றும் விருந்தோம்பல் துறை ஊழியர்கள் ( Hospitality workers) உலகின் பல நாடுகளில் வேலை செய்கிறார்கள். அவர்களைப் பயிற்றுவிக்கும் நிறுவனங்களே வாய்ப்புகளைப் பெற்றுத்தருகிறார்கள். இவை பற்றி மேலதிக விவரங்கள் அறிய

jananayakam.associates@gmail.com

என்னும் மின் அஞ்சல் விலாசத்திற்கு குறுகிய சுய விவரக்கோவையுடன் (brief bio data) தொடர்பு கொள்ளவும்.



காலைக்கதிர் Kalaikkathir

# மருந்துத் தட்டுப்பாடு பற்றி ஆராய மூவரடங்கிய குழு



நாட்டில் வைத்தியசாலைகளில் நிலவும் மருந்துத் தட்டுப்பாடு குறித்து ஆராய்வதற்காக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் மூவரடங்கிய குழுவை நியமித்துள்ளது.

இந்தத் தொழில்நுட்பக் குழுவினூடாக, மருந்துத் தட்டுப்பாடு பிரச்சினையை நிவர்த்தி செய்வதற்கான உதவியை வழங்க எதிர்பார்ப்பதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு மற்றும் ஊடகக்குழு உறுப்பினர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்தார்.







## மணமகன் விபரம்

**பிறந்த திகதி**-03.09.1990
**மதம்**-இந்து
**ஜாதி**-V ஆண்
**நட்சத்திரம்**-அவிட்டம் 1
**கி.பா**-23
**செவ்**-7ல்
**தகைமை**-M.B.B.S
**தொழில்**-DOCTOR UK PR
**எதிர்பார்ப்பு**- DOCTOR ENG + CEYLON மணமகள்

**பிறந்த திகதி**-27.01.1994
**மதம்**-இந்து
**ஜாதி**-P ஆண்
**நட்சத்திரம்**-பூசம்
**கி.பா**-36
**செவ்**-சூரி 11ல்
**தகைமை**-B.SC ENG
**தொழில்**-U.S.A. PR
**எதிர்பார்ப்பு**- B.SC பட்டதாரி U.S.A.+CEYLON மணமகள்

**பிறந்த திகதி**-22.12.1980
**மதம்**-இந்து
**ஜாதி**-P ஆண்
**நட்சத்திரம்**-திருவாதிரை
**கி.பா**-24
**செவ்**-6ல்
**தகைமை**-B.COM
**தொழில்**-U.K. WORK
**எதிர்பார்ப்பு**- U.K, EUROPE மணமகள் தேவை

**பிறந்த திகதி**-18.05.1990
**மதம்**-RC
**ஜாதி**-P ஆண்
**நட்சத்திரம்**-சதயம்
**கி.பா**-40
**செவ்**-3ல்
**தகைமை**-M.B.B.S
**தொழில்**-DOCTOR
**எதிர்பார்ப்பு** - பட்டதாரி மணமகள் DOCTOR ENG

**பிறந்த திகதி**-08.09.1982
**மதம்**-இந்து
**ஜாதி**-V ஆண்
**நட்சத்திரம்**-பரணி
**கி.பா**-35
**செவ்**-7ல்
**தகைமை**-N.C.T மெக்கானிக்கல்
**தொழில்**-. அரசசேவை
**எதிர்பார்ப்பு** - அரசசேவை தனியார் மணமகள்

**பிறந்த திகதி**-30.09.1987
**மதம்**-இந்து
**ஜாதி**-V ஆண்
**நட்சத்திரம்**-பூராடம் 1
**கி.பா**-74
**செவ்**-சூரி 6ல்
**தகைமை**-B.SC CIVIL ENG
**தொழில்**-இலங்கை மின்சாரசபை ENG
**எதிர்பார்ப்பு**- பட்டதாரி மணமகள் கொழும்பில் விருப்பம்

**பிறந்த திகதி**-02.07.1980
**மதம்**-இந்து
**ஜாதி**-V ஆண்
**நட்சத்திரம்**-சதயம்
**கி.பா**-18
**செவ்**-12ல்
**தகைமை**-ACCOUNTANT
**தொழில்**- COMPANY
**எதிர்பார்ப்பு**- A/L படித்த மணமகள் தேவை

**பிறந்த திகதி**-23.09.1984
**மதம்**-இந்து
**ஜாதி**-V ஆண்
**நட்சத்திரம்**-மகம்
**கி.பா**-15
**செவ்**-6ல்
**தகைமை**-G.C.G A/L
**தொழில்**-. TV மெக்கானிக்
**எதிர்பார்ப்பு**- A/L படித்த அரசசேவை தனியார் மணமகள்

## மணமகள் விபரம்

**பிறந்த திகதி**-20.10.1998
**மதம்**-இந்து
**ஜாதி**-P பெண்
**நட்சத்திரம்**-சதயம்
**கி.பா**-50
**செவ்**-8ல்
**தகைமை**-B.SC IT
**தொழில்**-வேலை தேடும் முயற்சி
**எதிர்பார்ப்பு**- வெளிநாடு PR மணமகன்

**பிறந்த திகதி**-18.06.1992
**மதம்**-இந்து
**ஜாதி**-P பகுதி
**நட்சத்திரம்**-திருகோணம்
**கி.பா**-30
**செவ்**-4ல்
**தகைமை**-ஆயுள்வேதம்
**தொழில்**-.DOCTOR கைதடி
**எதிர்பார்ப்பு**- DOCTOR மணமகன்

**பிறந்த திகதி**-04.10.1991
**மதம்**-இந்து
**ஜாதி**-V பெண்
**நட்சத்திரம்**-ஆயிலியம்
**கி.பா**-19
**செவ்**-சூரி 10ல்
**தகைமை**-M.BA
**தொழில்**-COMPANY
**எதிர்பார்ப்பு**- அரசசேவை மணமகன் யாழ்வேலை

**பிறந்த திகதி**-25.04.1988
**மதம்**-இந்து
**ஜாதி**-V பெண்
**நட்சத்திரம்**-ஆயிலியம்
**கி.பா**-69
**செவ்**-7ல்
**தகைமை**-B.COM
**தொழில்**- POST MASTER
**எதிர்பார்ப்பு**- பட்டதாரி அரசசேவை மணமகன்

**பிறந்த திகதி**-17.12.1993
**மதம்**-இந்து
**ஜாதி**-V பெண்
**நட்சத்திரம்**-திருகோணம்
**கி.பா**-18
**செவ்**-சூரி 10ல்
**தகைமை**-MBBS
**தொழில்**- AUSTRARIA PR
**எதிர்பார்ப்பு**- DOCTOR ENG மணமகன்

**பிறந்த திகதி**-12.12.1993
**மதம்**-இந்து
**ஜாதி**-V பெண்
**நட்சத்திரம்**-அனுசம்
**கி.பா**-4ல்
**தகைமை**-B.A
**தொழில்**- COMPANY WORK
**எதிர்பார்ப்பு**- அரசசேவை மணமகன் தேவை

**பிறந்த திகதி**-1992.07.20
**மதம்**-இந்து
**ஜாதி**-V பெண்
**நட்சத்திரம்**-மிருகசீரிடம்2
**கி.பா**-17
**செவ்**-4ல்
**தகைமை**-B.SC
**தொழில்**- BANKOFFICER
**எதிர்பார்ப்பு**- பட்டதாரி அரசசேவை மணமகன்

**பிறந்த திகதி**-02.06.1993
**மதம்**-இந்து
**ஜாதி**-V பெண்
**நட்சத்திரம்**-விசாகம் 1
**கி.பா**-69
**செவ்**-9ல்
**தகைமை**-B.SC CIVIL ENG
**தொழில்**- COMPANY
**எதிர்பார்ப்பு**- அரசசேவை+ வெளிநாடு மணமகன்

Australia, Canada, UK, USA,Swiss, Germany, Italy, France, Newzeland- இந்த நாடுகளில் Visa உள்ளவர்கள் இல்லாதவர்கள் மணமகன் மணமகள் விபரம் தந்தால் திருமணம் நிறைவேற்றித் தருவோம்.

காலைக்கதிர் தொலைபேசி 021 222 3000

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விபரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.












காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அரச பயங்கரவாதத்திற்கான சட்டம்

உலக நாடுகளாலும், சர்வதேச சமூகத்தினாலும், சுயாதீன நோக்கர்களாலும், சட்ட நிபுணர்களாலும் மிக மோசமான – மிகக் கொடூரமான – மனித நாகரீகத்துக்கே ஒவ்வாத – ஒன்று என்று தூற்றப்படுவது இலங்கையின் பயங்கரவாதத் தடைச் சட்டமாகும்.

தமிழர்களுக்கு எதிராகக் கடந்த 44 வருடங்களாக அது எவ்வளவு மிலேச்சத்தனமாக பிரயோகிக்கப்பட்டு வருகிறது என்பது நீண்ட காதை. பௌத்த, சிங்களப் பேரினவாத அரசுகளின் அரச பயங்கரவாதத்துக்கு காப்புரிமை வழங்குவதற்கான சட்டமே அது என்பது உலகறிந்த இரகசியம்.

"இந்தச் சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும் என்பது இப்போதைய ஜனாதிபதி ரணில் உட்பட அனைவரும் ஏற்றுக் கொண்ட விடயம். முன்னைய கோட்டாபய நிர்வாகம் கூட இந்தச் சட்டத்தை மாற்றுவதற்கு இணங்கி இருந்தது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கும் வரை அதை இப்போதைக்கு பயன்படுத்துவது இல்லை என்ற உறுதி மொழி கூட ஆளுதரப்பிலிருந்து வழங்கப்பட்டிருந்தது. ஆனால் இப்போது திடீரென அனைத்துப் பல்கலைக் கழக மாணவர்கள் ஒன்றியம் நடத்திய ஜனநாயகப் போராட்டத்தை அடுத்து, அதனை முன்னெடுத்த மூன்று மாணவர்கள் மீது அந்தச் சட்டம் பாய்ந்து இருக்கின்றது. இந்தச் சட்டத்தின் கீழ் மூன்று மாதத் தடுப்புக் காவல் உத்தரவு அவர்களுக்கு எதிராக வழங்கப்பட்டிருக்கின்றது" – என்று விசனத்தோடு சுட்டிக்காட்டியிருக்கின்றார் கூட்டமைப்பின் பேச்சாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் எம்.பி.

மாணவர்கள் நடத்தியது ஜனநாயக எழுச்சிப் போராட்டம். அது பயங்கரவாதமே அல்ல என்பது தெளிவு. அந்தப் போராட்டத்தில் வன்முறை இடம் பெற்றது அல்லது வன்முறை தூண்டப்பட்டது என்றால் அதற்காக அதனைப் பயங்கரவாதம் எனச்அடையாளப்படுத்த முடியாது என்பது தெளிவானது. அப்படி இருக்கையில் இந்த மாணவர் தலைவர்களுக்கு எதிராக அந்தச் சட்டம் பாய்ந்திருக்கின்றது. வித்தியா கொலை வழக்கு வன்முறையாளர்களுக்கு எதிராகவும் கூட இந்தச் சட்டம் பாய்ந்தமை நமக்குத் தெரியும்.

இந்த விடயங்கள் இந்தச் சட்டத்தை தங்களது தேவைகளுக்கும் விருப்புகளுக்கும் ஏற்ப, அரசுத் தலைமையும், அதிகார வர்க்கமும் துஷ்பிரயோகம் செய்து, தவறாகப் பயன்படுத்துகின்றன, தமது அரசியல் எதிரிகளை அடக்க சட்டவிரோதமாக அதிகார குளறுபடி செய்து இந்தச் சட்டத்தை மிகவும் தவறாகப் பிரயோகிக்கின்றன என்பதற்கு மிகத் தெளிவானதும் அப்பட்டமானதுமான உதாரணங்களாகும்.

உயர் கல்விக்குப் பொறுப்பான கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்திருந்தார். அவரைச் சந்தித்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதிகள் இந்தச் சட்டம் யாழ் பல்கலைக் கழக முன்னாள் மாணவ தலைவர்களுக்கு எதிராகவும் பிரயோகிக்கப்பட்டு, வழக்குகள் இன்னும் நிலுவையில் இருக்கின்றமையை நேரடியாகச் சுட்டிக்காட்டி இருக்கின்றார்கள்.

"மாணவர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. வடக்கில் மட்டுமல்ல, தெற்கிலும் பலர் இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். அது தவறு. சட்டத்தரணியாக பல்கலைக்கழக மாணவர்களுக்காக நான் வழக்குகளில் முன்னிலையாகி இருக்கிறேன். இந்த மாணவர்கள் விடுவிக்கப்பட வேண்டும்" – என்று யாழ். பல்கலைக மாணவர் ஒன்றிய தலைவர்களுக்கு எதிரான வழக்குக் குறித்து உயர்கல்வி அமைச்சர் யாழ்ப்பாணத்தில் பேசிக் கொண்டிருந்த அதே நேரத்தில்தான், கொழும்பில் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றிய ஏற்பாட்டாளர்களுக்கு எதிராகப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழான தடுப்புக் காவல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. இதுதான் இலங்கை அரசியலினதும் அரசியல் தலைமைத்துவங்களினதும் சீத்துவம்.

## மீண்டும் அரசியலுக்கு வருகின்றமை தொடர்பாக கோட்டா இதுவரை எதுவும் தெரிவிக்கவில்லை!

### அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கூறுகிறார்



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீண்டும் அரசியலுக்கு வருவது தொடர்பில் இதுவரை எந்த அறிவித்தலையும் வெளியிடவில்லை என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறானதொரு தீர்மானத்தை எடுப்பார் என தாம் நம்பவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டின் சாதாரண குடிமக்களுக்குக் கிடைக்கும் சுதந்திரம் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் கிடைக்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷ அமெரிக்கக் குடியுரிமையைத் துறந்து இந்த நாட்டுக்கு வந்து மக்களுக்காக பணியாற்றினார் எனவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

எனவே அவர் வெளிநாடுகளில் தலைமறைவாக இருக்க முடியாது எனவும், இது அவரது மனித உரிமையை மீறுகின்ற செயல் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, அவர் இந்த நாட்டுக்கு திரும்புவதற்கு தேவையான வசதிகளை செய்து கொடுக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஜனாதிபதிக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்குகின்றது எனவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொண்ட பெரும்பான்மையானோர் இன்று எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியுடன் இணைந்து பணியாற்றுவது தங்களை விட அவர்களுக்கு இலகுவானது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## தேர்தலை நடத்தினால் அரசியல்வாதிகளுக்கு நாட்டு மக்கள் தக்கபாடத்தை புகட்டுவார்கள்!

### முருந்தெட்டுவே ஆனந்த தேரர் எச்சரிக்கை

நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள பின்னணியில் அரசியல்வாதிகள் அமைச்சு பதவிகளுக்காகப் போட்டிபோட்டுக் கொண்டிருக்கிறார்கள் என அபயராம விகாரையின் விகாராதிபதி முருந்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

அபயராம விகாரையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதேவேளை –

பொதுத்தேர்தலை நடத்தினால் நாட்டு மக்கள் பெரும்பாலான அரசியல்வாதிகளுக்கு தக்க பாடத்தை புகட்டுவார்கள் என்பதோடு சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்காவிடின் பொதுத்தேர்தலை நடத்துங்கள் என்பதை அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளோம் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் பெரும்பாலான நாடுகள் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட போது அந்நாட்டு அரசியல்வாதிகள் அரசியல் கட்சி பேதங்களைத் துறந்து பொது கொள்கையின் அடிப்படையில் ஒன்றிணைந்து செயற்பட்டு, நாட்டைக் கட்டியெழுப்பியுள்ளார்கள் எனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை, தாய்லாந்து, தென்கொரியா ஆகிய நாடுகள் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட போது அந்நாட்டு மக்கள் தமது சொத்துக்களையும், தங்கத்தையும் அரசாங்கத்துக்கு வழங்கி பொருளாதார நெருக்கடியை வெற்றிகொண்டார்கள். அந்த நாட்டு அரசாங்கங்கள் அந்நாட்டு மக்களை ஒரு போதும் நெருக்கடிக்குள்ளாக்கவில்லை எனக் குறிப்பிட்ட அவர், யார் ஜனாதிபதி, யார் பிரதமர், யாருக்கு எந்த அமைச்சு என்பதற்கு மாத்திரம் அவதானம் செலுத்தப்படுகிறது என குற்றம் சாட்டியுள்ளார்.

## காட்டாட்சி மூலமாக பிரச்சினைகளை தீர்க்க இடமளிக்க என்றும் முடியாது!

### கமல் குணரத்ன திட்டவட்டம்

காட்டாட்சிமூலம் பிரச்சினைகளைத் தீர்க்க இடமளிக்கமுடியாது என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்துள்ளார்.


கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பங்கேற்று கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் வன்முறையைத் தூண்டி, பொலிஸாரைத் தாக்கி, மிகவும் கீழ்த்தரமாக விமர்சித்தவர்களைக் கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது, அத்தகையவர்களுக்காக நூற்றுக்கணக்கான சட்டத்தரணிகள் இலவசமாக முன்னிலையாகின்றனர்.

அதுமட்டுமல்ல சில சட்டத்தரணிகள் நீதிமன்றத்துக்குள் கைதட்டுகின்றனர். இப்படியான நடவடிக்கையால் பொலிஸார் உள ரீதியில் பாதிக்கப்பட்டனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிலர் தவறான வழியில் பணம்தேடி வீடுகளை நிர்மாணித்து இருந்தால், அதற்கு எதிராகச் செயற்படுவதற்கு நாட்டில் சட்ட கட்டமைப்பு உள்ளது.

இப்படியான பிரச்சினைகளைக் காட்டாட்சி மூலம் தீர்க்க முடியாது எனவும், எவரும் சட்



டத்தை கையில் எடுத்து செயற்படவும் முடியாது எனவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்துள்ளார்.

போராட்டக்காரர்கள் எனக் கூறப்படுபவர்களால் ஜனாதிபதி மாளிகைக்குள் உள்நுழைந்த பின்னர், அங்கிருந்த நீச்சல் தடாகத்தில் சவக்காரம் போட்டு குளிக்கும் காட்சியும் வெளியானது.

இது வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களுக்கு பெரும் அவமானத்தை ஏற்படுத்தியது எனவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன குறிப்பிட்டுள்ளார். அந்த நாடுகளில் உள்ளவர்கள், அந்த சம்பவத்தை வைத்து எம்மவர்களை ஏளனமாக பார்த்தனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# மரண அறிவித்தல்

தோற்றம் 02 • 02 • 1939



மறைவு 17 • 08 • 2022

## திரு இரத்தினம் கோபாலகிருஸ்ணன் (ஆசன்)

யாழ். கொக்குவில் நந்தாவிலைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில், சாவகச்சேரி, அவுஸ்திரேலியா சிட்னி ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட இரத்தினம் கோபாலகிருஸ்னன் அவர்கள் 17-08-2022 புதன்கிழமை அன்று அவுஸ்திரேலியாவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற இரத்தினம், அழகம்மா தம்பதிகளின் இளைய மகனும், காலஞ்சென்ற சுப்ரமணியம், அன்னலச்சுமி தம்பதிகளின் பாசமிகு மருமகனும், சிவனேஸ்வரி (வனிதா) அவர்களின் அன்புக் கணவரும், வனுஷ்யா (லண்டன்), சிந்துஜா (லண்டன்), துஸ்ஜா (கட்டார்), பிரியா (அவுஸ்திரேலியா), கோபிராஜ் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், உதயராஜ், அகிலேஸ்வரன், திருஞானசம்பந்தர், முகுந்தன், நிறஞ்சி ஆகியோரின் அன்பு மாமனாரும், சரன்ராஜ், பிரிவின்ராஜ், மாதேஷ், விபித்திரா, ஜீவித்தா, நிதுக்சன், அனிஷ், கிரிஷ், கசிக்கா, அக்சிகா, டக்சிகா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற பூபதி, தர்மலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவராசா, சிவராணி, சிவமணி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்21.08.2022 ஞாயிற்றுக்கிழமை Corner and Roads, Delhi Rd & Plassey Rd, North Ryde NSW 2113, Australia நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு
சிவனேஸ்வரி(வனிதா) - மனைவி Mobile : +61410771055
பிரிவின்ராஜ் - பேரன் Mobile : +447917370023
அகிலேஸ்வரன் - மருமகன் Mobile : +447944911230
திருஞானசம்பந்தர் - மருமகன் Mobile : +97455547952
முகுந்தன் - மருமகன் Mobile : +61402069165
கோபிராஜ் - மகன் Mobile : +447465987533

# நுரைச்சோலை அனல் மின் நிலையத்துக்கு இருவருட நிலக்கரி வழங்குகின்றது ரஷ்யா

நுரைச்சோலை அனல் மின் நிலையத்துக்கு இரண்டு வருடங்களுக்கு நிலக்கரி வழங்க ரஷ்ய நிறுவனம் ஒன்று முன்வந்துள்ளது.

லங்கா நிலக்கரி நிறுவனத்தின் தலைவரும், முகாமைத்துவப் பணிப் பாளருமான ஜகத் பெரேரா இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

நிலக்கரி விநியோகத்துக்கான விலைமனு கோரலுக்கு பதிலளித்த இரண்டு நிறுவனங்களில், ரஷ்ய நிறுவனம் ஏலம் பெறுவதற்கான வாய்ப்புகளை அதிகம் கொண்டுள்ளதாகவும், மற்றைய நிறுவனங்களும் மேன்முறையீடு செய்யலாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒக்ரோபர் இறுதி வரை போதுமான நிலக்கரி கையிருப்பு இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

செப்டெம்பர் 30 வரையான காலப்பகுதிக்குத் தேவையான நிலக்கரியே இருந்தாகவும், நுரைச்சோலை மின் நிலையத்தின் ஒரு மின்பிறப்பாக்கியை கட்டாய பராமரிப்புக்காக மூட வேண்டியிருந்தது.

மற்றொரு மின்பிறப்பாக்கி அண்மையில் பழுதடைந்தது. அது வழமைக் குத் திரும்ப இரண்டு வாரங்களாகும் என்பதால், ஒக்ரோபர் இறுதி வரை கையிருப்பு போதுமானதாக இருக்கும் எனவும் அவர் கூறினார்.

ஐந்து மாத கடன் சலுகை காலத்தைக் கோரியதாகவும், இருப்பினும், ரஷ்ய நிறுவனம் ஆறு மாதங்களை வழங்க ஒப்புக்கொண்டது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஒக்ரோபர் முதல் நிலக்கரியை இறக்குமதி செய்யத் தொடங்குவோம் எனத் தெரிவித்த அவர், விலை சூத்திரத்தின் மூலம் விலை நிர்ணயிக்கப்படும் எனவும் கூறியுள்ளார்.

அண்மையில் 40 லட்சத்து 50 ஆயிரம் மெற்றிக் தொன் நிலக்கரியை லக்விஜய மின் உற்பத்தி நிலையத்துக்கு, மூன்று ஆண்டுகளுக்கு வழங்குவதற்கான கேள்விப் பத்திரத்தை முன்வைத்தது.

கடந்த 10 ஆம் திகதி ஏலம் முடிவடைந்தது எனவும் லங்கா நிலக்கரி நிறுவனத்தின் தலைவரும், முகாமைத்துவப் பணிப்பாளருமான ஜகத் பெரேரா தெரிவித்துள்ளார்.

மின் உற்பத்தி நிலையத்துக்கு ஆண்டுக்கு 20 லட்சத்து 36 ஆயிரம் மெற்றிக் தொன் நிலக்கரி தேவைப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் செப்டெம்பர் மற்றும் மே மாதங்களில் மட்டுமே நிலக்கரியை இறக்குமதிசெய்ய முடியும்.

முந்தைய வழங்குநர் இன்னும் 11 லட்சத்து 40 ஆயிரம் மெற்றிக் தொன் நிலக்கரியை வழங்க வேண்டியிருந்தது என்றும், அவற்றில் ஒக்ரோபர் முதல் ரஷ்ய நிறுவனம் 2022ஆம் ஆண்டுக்குரிய மீதமுள்ள நிலக்கரியையும், 2023ஆம் ஆண்டும், மற்றொரு வருடத்துக்கும் நிலக்கரியை வழங்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பொருளாதார - நிதி சீர்திருத்தங்கள் தொடர்பாக ஆராய சர்வதேசநாணய நிதிய அதிகாரிகள் வருகை

பொருளாதார மற்றும் நிதி சீர்திருத்தங்கள், கொள்கைகள் தொடர்பாக இலங்கை அதிகாரிகளுடன் தொடர்ந்து கலந்துரையாடுவதற்காக சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள் குழு அடுத்த வாரம் கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வருகை தரவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாட்டுக்கான, பணிக்குழாம் மட்ட ஒப்பந்தத்தை நோக்கி முன்னேறுவதே இந்த விஜயத்தின் நோக்கமாகும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக் குழுவின், விரிவாக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் ஒப்புதலுக்கு, கடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதற்காக, இலங்கையின் கடன் வழங்குநர்களின் போதுமான உத்தரவாதங்கள் அவசியமாகும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.



# மோசமான சர்வாதிகாரியே 'ரணில் ராஜபக்ஷ'

## முன்னாள் எம்.பி. ஹிருணிகா விளாசல்



ராஜபக்ஷக்களை விடவும் மிகவும் மோசமான சர்வாதிகாரியே 'ரணில் ராஜபக்ஷ' என்பவர்.

– இவ்வாறு விளாசித் தள்ளியுள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஹிருணிகா பிரேமச்சந்திர.

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணை தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காக ஹிருணிகா பிரேமச்சந்திர நேற்று சி.ஐ.டிக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

இதற்கமைய நேற்று முற்பகல் விசாரணைக்கு வந்த ஹிருணிகா, சி.ஐ.டி. அலுவலகத்துக்குள் செல்வதற்கு முன்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டார். அவ்வேளையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

போராட்டக்காரர்களின் கருணையால்தான் ரணில் ஜனாதிபதியானார். அந்தப் போராட்டம் தொடர்பில் விசாரணை நடத்தவே அழைக்கப்பட்டிருக்கிறேன் என நம்புகின்றேன்.

போராட்டக்காரர்கள் வேட்டையாடப்படுகின்றனர். இதன் ஓர் அங்கமாக நானும் இலக்கு வைக்கப்பட்டுள்ளேன். அமைதியாகவே போராடினோம். எமது போராட்டம் ராஜபக்ஷக்களுக்கு மட்டுமே தலையிடியாக அமைந்தது.

எது எப்படி இருந்தாலும் ஒடுக்குமுறை செயலை வன்மையாகக் கண்டிக்கின்றேன். பல்கலைக்கழக மாணவர்கள்கூட பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்படுகின்றனர். ராஜபக்ஷக்களை விடவும், மோசமான சர்வாதிகாரியே ரணில் ராஜபக்ஷ – என்றார்.

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பிரயோகத்துக்காக சர்வதேச சமூகத்துக்கு அரசு பதில் கூற வேண்டி வரும்

## காட்டமாகக் கண்டிக்கின்றார் சுமந்திரன் எம்.பி.

(கலையமுதன்)

பயங்கரவாதம் எனக் கூறி பல்கலைக்கழக மாணவர் தலைவர்களை மூன்று மாதங்களுக்கு தடுப்பிலேயே வைத்திருப்பதற்கான யோசனை மிகவும் வருந்தத்தக்கது. அரசாங்கம் சர்வதேச சமூகத்திற்கு இது குறித்து பதில் சொல்ல வேண்டி இருக்கும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

கொழும்பில் பல்கலைக்கழக மாணவர். ஒன்றிய ஏற்பாட்டாளர்களின் கைது தொடர்பாக நேற்று யாழ்ப்பாணத்தில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய போராட்டத்தின் போது கைது செய்யப்பட்ட மூன்று பேர் 72 மணி நேரம் தடுத்து வைத்து விசாரிக்கப்படுகின்றனர் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்தது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுப்புக் காவல் கட்டளை ஒன்றைப் பெற்று மூன்று மாதங்கள் தடுத்து வைத்திருப்பதற்கு தாங்கள் கோரியிருக்கின்றனர் எனவும் பொலிஸார் கூறியுள்ளார்கள்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும் என்பது அனைவரும் ஏற்றுக் கொண்ட விடயம். கடந்த ஆட்சிக் காலத்திலே பயங்கரவாத தடை சட்டத்தை நீக்கி வேறொரு சட்டத்தை கொண்டு வருவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்திருந்தது. இந்தப் பயங்கரவாத தடைச் சட்டம் மிக மோசமானது. அது முற்றாக நீக்கப்பட வேண்டும் என நாடு முழுவதுமே நாம் ஒரு போராட்டம் நடத்தி வருகின்றோம். இவ்வாறான சந்தர்ப்பத்தில் இலங்கை அரசாங்கம் பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படுகின்ற வரை அதனை உபயோகிக்க மாட்டோம் என வாக்குறுதி கொடுத்திருக்கின்றார்கள். அவ்வாறான சூழ்நிலையில்தான் திடீரென மீண்டும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உபயோகிக்கின்றார்கள்.

பல்கலைகழக மாணவர் ஒன்றிய செயலாளர் வசந்த முதலிகே மற்றும் இருவர் போராட்டத்தின்போது கைது செய்யப்பட்டனர். 16 பேருக்கு பிணை கொடுக்கப்பட்ட போதும் இவர்களுக்கு மட்டும் பயங்கரவாதத் தடைச் சட்டப் பிரிவு பிரயோகிக்கப்படுகின்றது. காலாவதியாகி இருக்க வேண்டிய பயங்கரவாதத் தடைச் சட்டம் முற்றாகவே நீக்கப்பட வேண்டுமென அனைவரும் ஏற்றுக் கொண்டிருக்கின்றபோதும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உபயோகிக்க ஆரம்பிப்பது மிகவும் மோசமான அடிப்படையாக நாங்கள் கருதுகிறோம். அப்படி அது உபயோகிக்கப்படக் கூடாது.



பயங்கரவாதச் செயல் எதுவும் நடைபெறவில்லை. மக்கள் ஜனநாயக வழியில் போராடுவது அவர்களுக்கான உரிமை. அதற்காக அவர்களுக்குத் தண்டனை கூட வழங்க முடியாது. ஆனால் அதனை பயங்கரவாதம் என சொல்லி மாணவர் தலைவர்களை மூன்று மாதங்களுக்குத் தடுப்பிலேயே வைத்திருப்பதற்கான இந்த யோசனை மிகவும் வருந்தத்தக்கது. அரசாங்கம் சர்வதேச சமூகத்திற்கு இது தொடர்பில் பதில் சொல்ல வேண்டியிருக்கும். இந்த மாணவ பிரதிநிதிகள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதோடு, இந்தச் சட்டம் முற்றுமுழுதாக நீக்கப்பட வேண்டும் என்கிற கோரிக்கையை நாங்கள் முன் வைப்போம். – என்றார்.

# ஹிருணிகாவை ஆறு மணிநேரம் துருவியது சி.ஐ.டி.

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவிடம், சி.ஐ.டியினர் 6 மணிநேரத்துக்கு மேல் வாக்குமூலம் பதிவுசெய்துள்ளனர்.

நேற்று முற்பகல் 11 மணியளவில் சி.ஐ.டி. வந்த ஹிருணிகாவிடம், மாலை 5 மணி வரை விசாரணை நடத்தப்பட்டது.

நாட்டில் இடம்பெற்ற போராட்டங்கள் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பில் அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டது.

விசாரணை தொடர்பில் கருத்து வெளியிட்ட ஹிருணிகா,

பாசிசவாதிகளிடமிருந்து நாட்டைக் காப்போம் எனும் தொனிப்பொருளின் கீழ் அடுத்த தேர்தலுக்கு மொட்டுக் கட்சி தயாராகி வருகின்றது. அதற்கான வழிமுறைகள் தற்போது தயாரிக்கப்படுகின்றது. அதன் ஓர் அங்கமே இந்த விசாரணை – என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622

# இலங்கை – இந்தியக் கடல் நடுவில் மண்திட்டில் 3 நாள்களாக மீட்பாரின்றி அந்தரிக்கும் எண்மர்!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஒக.20

இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு தப்பிச் சென்ற 8 பேர் 3 தினங்களாக நடுக்கடலில் மணல் திட்டு ஒன்றில் தத்தளிக்கின்றனர்.

இலங்கையில் இருந்து தமிழகம் நோக்கி படகில் ஏற்றிச் செல்லப்பட்ட 8பேரையும இலங்கைப் படகு ஓர் திடலில் இறக்கி விட்டுத் திரும்பிய நிலையிலேயே 8 பேரும் 3 தினங்களாக உணவோ அல்லது குடிநீரோ இன்றித் தவிக்கின்றனர் எனவும் இதில் நான்குபேர் சிறுவர்கள் எனவும் திடலில் தவிப்பவர்கள் மிகத் தெளிவின்றிக் கிட்டிய தொலைசிபேசித் தொடர்பில் தெரிவித்துள்ளனர்.

இதேநேரம் இந்த விடயம் இரு நாட்டுக் கடற்படையினரின கவனத்திறகும் கொண்டு செல்லப்பட்டுள்ளதனால் 8பேரும் எந்த நாட்டின எல்லையில் சிக்கியுள்ளனர் என்ற தேடுதல் இரு தரப்புகளாலும் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

இச் செய்தி பிரசுரமாகும் வரையில் 8பேரும் மீட்கப்படவில்லை. அவர்கள் இலங்கைக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நிற்கின்றனரா அல்லது இந்திய எல்லைக்குள் நிற்கின்றனரா என்பது தொடாபிலும் இன்னும் உறுதி செய்ய முடியவில்லை.



# RADIANT DAWN

A Sunday Supplement in English to Kalaikkathir


Page I English for all Sunday the 21st of August 2022


We welcome students' articles in word for publication

-Editor-

kalaikkathiredu@gmail.com

# A WORLD OF SHOPPING



Some malls are not very big. But there are a few malls that are so big that they almost seem like cities. One of the biggest malls in the world is the Mall of America near St. Paul, Minnesota. Just how big is the Mall of America? Thirty-two Boeing 747 airplanes could fit inside!

What can you find in the Mall of America? There is a flight simulator, a mirror maze, and miniature golf. The Mall of America has a huge aquarium, too. It also has a full-size theme park. There is a large movie theater at the Mall of America, with fourteen screens.

Many people go to malls to shop, and you can certainly shop at the Mall of America. There are more than 520 stores at the mall. They sell everything from clothes and jewelry to groceries. You can even make your own stuffed bear there. If you spent only ten minutes at each store at the Mall of America, it would take you eighty-six hours to get to each one.

The Mall of America is very big, but it is not the largest mall in the world. The largest mall in the world is the Dubai Mall. Dubai is located in the United Arab Emirates. The Dubai Mall has over 1,000 stores. It also has a skating rink and a large movie theater. There is an aquarium, too.

If you're hungry, the Dubai Mall has 150 restaurants. Some are fast-food restaurants, and some are fancy restaurants. There are family restaurants at the mall, too. After you eat, you can shop for anything you might want.

The Dubai Mall is so big that you cannot visit the whole mall in one day. So, there is a hotel connected to the mall. People who want to spend several days visiting the mall can stay at that hotel.

## Read “A World of Shopping” and then answer the questions

**01. What does the fourth paragraph gives facts about?**
A. the United Arab Emirates
B. the Mall of America
C. the Dubai Mall
D. St. Paul, Minnesota

**02. Which structural pattern is used in this text?**
A. cause and effect
B. compare and contrast
C. chronological order
D. sequential order

**03. What is the author's purpose?**
A. to get readers to visit the aquarium at the Mall of America
B. to give directions to the Mall of America
C. to tell about the Mall of America and the Dubai Mall
D. to tell readers how to be safe when shopping at the mall

**04. What is a Boeing 747?**
A. a very large airplane
B. a small stunt airplane
C. a two-person airplane
D. an airport



**05. How does the Dubai Mall compare to Mall of America?**
A. They are the same size.
B. The Dubai Mall is larger.
C. The Dubai Mall is smaller.
D. The malls are next to each other.

**06. Why do you think the Mall of America and the Dubai Mall are not in downtown areas?**
A. People do not want to shop there.
B. They are too big for downtown areas.
C. Cities do not want people to shop at malls.
D. They are too small for downtown areas.



**07. What do the Mall of America and the Dubai Mall have in common?**
A. They are very small malls.
B. They are located in the United States.
C. They both have skating rinks.
D. They both have movie theaters.

**08. Which words in the text would most help a reader summarize the text?**
A. Mall of America and Dubai Mall
B. eighty-six hours and ten minutes
C. jewelry and groceries
D. hungry and restaurants

## *Read the text and then answer the questions.*

Today, there are still many malls, but people now have other ways to shop. Many people shop online. They don’t have to go to malls to find what they want. So, malls have to offer things that people cannot find online. Many malls offer entertainment, or fun things to do. For example, some malls have movie theaters, and others have bowling alleys. Many malls have play areas with toys and rides for little children. There are even malls that offer fitness centers and doctors’ offices. Malls have changed a great deal since they were first built in the 1950s. But they are still important parts of many people’s lives. They are good places to meet with friends and shop for almost anything.

01. Which of the following is not mentioned in this text?
A. movie theatres
B. play areas
C. schools
D. fitness centers

02. According to the author, which is one reason why malls have changed?
A. People can find what they want at malls.
B. People can meet with friends.
C. Malls now offer movie theaters.
D. People can find what they want online.

**Have no fear of perfection you'll never reach it. - Salvador Dali -**

# Athlete Ethirveerasingam was a revolutionary in the high jump event



Nagalingam Ethirveerasingam is another Sri Lankan athlete who had the rare opportunity of participating in two Olympics in 1952 and in 1956.

He was also an athlete who reached great heights through his own efforts. Several champion athletes were making a strong bid to shatter the public schools high jump record at the Public Schools Athletics Meet in 1940. The existing record had been established by V. G. George of Jaffna College clearing a height of 6 feet 0.1/8 inches.

At this time a young boy about 12 years of age was practicing the high jump using his self-made high jump equipment in the cool shades of palmyrah trees in North Ceylon.

None would have anticipated this boy who daily cleared a height of over four feet would be a superstar in the years to come. This young boy entered competition shattering the junior high Jump record at the Public Schools Athletics meet in 1946.

He then cleared six feet and three inches and shattered the 12-year record of V. G. George. He proved himself once again by shattering the Ceylon Record clearing six feet and four inches at the National Championships held in 1952 at the P. Sara Oval.

The same year he participated in the Invitation Sports Festival held in Pakistan and shattered the Pakistani record. By this time Ethirveerasingam was a student of the Central College, Jaffna.

These victories enabled Ethirveerasingam to qualify for the Helsinki Olympics in 1952. He was the youngest member of the Sri Lankan Team to participate in the Olympics. In 1954, at the second Asian Games held in the Philippines, he cleared six feet and four inches. This was equalled by four athletes and Ethirveerasingam was placed fourth.

However, Ethirveerasingam was not discouraged and he continued to practice hard. In 1955, he left Jaffna Central College and entered St. Joseph's College, Colombo with a view to improving his athletic skills.

Under the guidance, of Duncan White, P. E. Rajendra and Anthony Abeysinghe he changed the style from the usual Western roll to the straddle jump.

At the athletic meet of St. Joseph's College held in the same year he cleared a height of six feet and seven inches.

Although he participated at the Melbourne Olympic Games he was not placed. He came for these games from the USA where he was engaged in studies.

In view of his success in the high jump, he was voted as the Sports Star in 1956 polling 79,894 votes.

At the third Asian Games held in Tokyo,



Japan in 1958, he won the Gold Medal while establishing a new Asian record of six feet and 7.7/8 inches.

This was the first time that Sri Lanka won a Gold Medal at the Asian Games in 1962.

Ethirveerasingam was a revolutionary in the field of athletics and his National record of six feet and 6 ½ inches remained unbroken till 1989.

# Putin offers money to women to have 10 kids to repopulate Russia



Russian President Vladimir Putin is offering money to women to have 10 or more children to restore demographics.

Russian President Vladimir Putin's initiative includes a one-payment of £13,500 for mothers to give birth to, and keep alive, 10 children.

Putin's initiative includes a one-payment of £13,500 to give birth to, and keep alive, 10 children

Russia's demographic crisis emerged due to Covid-19 pandemic and conflict with Ukraine

The scheme is being described as a desperate attempt by experts

Russian President Vladimir Putin is offering money to women to have 10 or more children to restore the country's demographic crisis that emerged due to the Covid-19 pandemic and the Russia-Ukraine war. The initiative which includes a one-payment of £13,500 to give birth to, and keep alive, 10 children, is being described as a desperate attempt by experts.

Dr Jenny Mathers, Russian politics and security expert, spoke to broadcaster Henry Bonsu on Times Radio about the new Russian reward scheme, known as Mother Heroine, that Putin has announced as a measure to replenish a dwindling population.



# மருத்துவக் கதிர்



## கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான உணவூட்டம்

கர்ப்ப காலத்திலும், பாலூட்டும் காலத்திலும், உடலியல் மாற்றங்கள் ஏற்படுவதால் உணவூட்டத் தேவைகள் மிக பெருமளவில் அதிகரிக்கின்றன. மற்ற எந்த காலத்தையும் விட கர்ப்பக் காலத்திற்கு முன் கொடுக்கப்படும் முழுமையான உணவூட்டம், மிக நல்லதொரு நீண்ட கால விளைவுகளை ஏற்படுத்தக் கூடியது. கர்ப்ப காலத்திற்கு முன், நல்ல உணவூட்டத்துடன் இருக்கும் பெண்மணிக்கு, கர்ப்பமடையும் போது அனைத்து சத்துக்களின் சேமிப்பு சிறப்பாக இருக்கும். எனவே வளரும் குழந்தையின் தேவைகள், கர்ப்பிணியின் உடல் நலத்தைப் பாதிக்காமல் பூர்த்தி செய்யப்படும். நல்ல உணவூட்டம் பெறும் குழந்தையே உடல்நலத்திலும், மூளை வளர்ச்சியிலும் சிறந்து விளங்கும். அது மட்டுமல்லாது கர்ப்பகாலத்திற்கு முன்னும், கர்ப்ப காலத்திலும் கொடுக்கப்படும் உணவூட்டம் பிரசவத்திற்குப் பிறகு சிறப்பான பாலூட்டுதலுக்கு உதவும்.

### கர்ப்ப காலத்தில் ஏற்படும் உடலியல் மாற்றங்கள்

குழந்தை வளர்ச்சியடையும் போது ஒரு பெண்ணின் உடலில் நிறைய உடலியல் மாற்றங்கள், உயிரியல் வேதி மாற்றங்கள் மற்றும் ஹார்மோன் **(hormone)** மாற்றங்கள் ஏற்படும். இதனால் உணவூட்டத்தின் தேவைகளும், அவற்றை உடல் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வதிலும் மாற்றங்கள் ஏற்படும். பல்வேறு வகையான மாற்றங்கள் பின்வருமாறு:

### அடிப்படை வளர்சிதை மாற்ற விகிதம் அதிகரித்தல் (Basal Metabolic Rate - BMR)

குழந்தையின் வளர்ச்சியின் காரணமாக முதல் மூன்று மாதங்களில் **BMR** 5 சதவீதம் அதிகரிக்கும், கர்ப்ப காலத்தின் கடைசிப் பகுதியில் மிக அதிகபட்சமாக 12 சதவீதம் அதிகரிக்கும்.

### உணவுக் குழாய் மண்டலத்தில் ஏற்படும் மாற்றங்கள்

உணவுக் குழாய்களின் அசைவுகள் குறைவதால் மலச்சிக்கல் ஏற்படுகிறது. இரைப்பையில் ஹைடிரோகுளோரிக் அமிலம் மற்றும் பெப்சின் சுரக்கும் அளவு குறைகிறது. கூடவே உணவுகுழலின் கீழ்பகுதியில் காணப்படும் குடல்வாய் சுருக்கி **(0esophagal Sphincter)** நெகிழ்ச்சியுற்றுக் காணப்படும். இதனால் இரைப்பையில் உள்ள உணவு மீண்டும் உணவுக் குழலுக்குச் செல்லும் வாய்ப்பு ஏற்படுகிறது. இதனால் நெஞ்சு எரிச்சலும், வாந்தி ஏற்படுவது போன்ற உணர்வும் ஏற்படும். இது குழந்தை வளர்ச்சியினால் ஏற்படும் அழுத்தத்தின் காரணமாக, அதிகமாக காணப்படும். பிற்பாதி கர்ப்பக் காலத்தில் இரும்பு, கால்சியம், B தொகுப்பு விற்றமின்களின் தேவை அதிகரிப்பதற்கு ஏற்ப, அவற்றை முழுமையாக உறிஞ்சப்பட இயற்கையிலேயே உடலில் போதுமான மாற்றங்கள் ஏற்படும்.

### ஹார்மோன் சுரப்பில் ஏற்படும் மாற்றங்கள்

கர்ப்பகாலத்தில் கீழ்கண்டவாறு ஹார்மோன்களின் சுரப்பு அதிகரிக்கிறது.

அட்ரீனல் சுரப்பி சுரக்கும் ஆல்டோஸ்டீரோன்.

புரோஜெஸ்டிரோன் அதிகமாக சுரந்து, வளரும் குழவிக்கு இடமளிக்க கர்ப்பப்பை தசைகளை விரிவடையச் செய்கிறது.

தைரோசின்.

பாராதைராய்டு ஹார்மோன்.

### உடலில் காணப்படும் திரவங்களில் ஏற்படும் மாற்றங்கள்

இரத்தத்தின் கன அளவு 51% அதிகரிக்கிறது. வளரும் குழவிக்கு உணவுச் சத்துக்களை எடுத்து செல்லவும். குழந்தையின் கழிவுகளை வெளியேற்றவும் இந்த அதிகரிப்பு அவசியமாகிறது.



இரத்தத்தின் அளவு அதிகரிக்கும் போது, அதில் காணப்படும் பிளாஸ்மா புரதங்கள், ஹீமோகுளோபின், இரத்த குளூக்கோஸ் மற்றும் நீரில் கரையும் விற்றமின்களின் அடர்த்தி குறைகிறது.

சீரம் ஆல்புமினின் அளவுக் குறையும் போது, அது செல்களிடையே நீரைத் தேங்கச் செய்கிறது.

ஹீமோகுளோபினின் அளவு அதிகரித்தப் போதும், அதன் அடர்த்தி இரத்தத்தில் 12 – 13கி/100மி.லி லிருந்து 11 கி / 100 மி.லி. ஆக குறைகிறது. இதற்கு ஹீமோடைல்யூன் **(haemodilution)** என்று பெயர். (ஹீமோகுளோபின் நீர்த்துப் போதல்

எனவே கர்ப்பகாலத்தில் ஹீமோகுளோபின் 10 கி/100 மி.லி. க்கு குறைவாகக் காணப்பட்டால் அது இரத்த சோகையாக கருதப்படுகிறது.

### சிறுநீரகச் செயல்பாடுகளில் ஏற்படும் மாற்றங்கள்

இரத்தத்தின் கன அளவு அதிகரிப்பதாலும், கிரியாட்டினின், யூரியா, குழந்தை மற்றும் தாயின் வளர்சிதை மாற்றத்தினால் உண்டாகும் கழிவுப் பொருள்கள் அதிகரிப்பதாலும், **Glomerular filteration Rate GFR** அதிகரிக்கிறது. இந்த வேலைப் பளுவைச் சிறுநீரக நெளிக் குழல்களால் தாங்க முடிவதில்லை. எனவே சாதாரணமாக மீண்டும் முழுவதுமாக உறிஞ்சப்படும் உணவு சத்துக்களின் ஒரு குறிப்பிட்ட சதவீதம் வெளியேற்றப் படுகிறது. இதனால் சிறுநீரில் குளூகோஸ், அமினோ அமிலங்கள் மற்றும் நீரில் கரையும் விற்றமின்கள் மிகச்சிறிய அளவில் காணப்படும்.

### கர்ப்ப காலத்தில் ஏற்படும் எடை ஏற்றம்

கர்ப்ப காலத்தில் ஏற்படும் எடை ஏற்றத்தில் பாதிபகுதி குழந்தை, நச்சுக் கொடி மற்றும் ஆம்னியாடிக் திரவத்தால் ஏற்படுகிறது. மீதிப்பாதி, தாயின் இனப்பெருக்கத் திசுக்கள். திரவங்கள், இரத்தம், சேமித்து வைக்கப்படும் கொழுப்பு ஆகியவற்றால் ஏற்படுகிறது. வயிற்றுப் பகுதியிலும், தொடைப் பகுதியிலும் தோலுக்கடியில் சேமித்து வைக்கப்படும் கொழுப்பு, கர்ப்ப காலத்திற்கும் பாலூட்டும் காலத்திற்கும் தேவைப்படும் சக்தி சேமிப்பாக விளங்குகிறது.

முழுமையான கர்ப்ப காலத்திற்கு, ஒரு இயல்பான, ஆரோக்கியமான பெண்ணுக்கு சராசரியாக 125 கி.கி. உடல் எடை கூடுதலாக இருக்க வேண்டும். அது 11 கிலோவிலிருந்து 13 கிலோ வரை இருக்கலாம். எடை கூடும் முறையும், மொத்த எடைக் கூடுதல் அளவுக்கு முக்கியமானது. முதல் மூன்று மாதங்களில் எடையானது சிறிதளவு கூடுகிறது (0.7 மிலி 14கி.கி.) அதற்கு பிறகு, சீராக 0.4 கி.கி/ வாரம் விரும்பத்தக்கது.

### கர்ப்பப்பை மற்றும் மார்பகம்

கர்ப்ப காலத்தில் எடையைக் குறைக்க எப்போதும் முயற்சி செய்யக் கூடாது. அதே சமயம் அதிக எடையேற்றமும், உறுப்புகளுக்கு அதிக சிரமத்தைக் கொடுக்கிறது. இதனால் டாக்ஸிமியா ஏற்படும் வாய்ப்பு அதிகரிக்கிறது.

### கூடுதல் உணவூட்டத்தின் அவசியம்

நல்ல உணவூட்டம் பெற்று, சத்துக்களின் சேமிப்பும் உடைய தாயால்தான், தன்னுடைய உடல் நலம் பாதிக்கப்படாமல் தன் குழந்தையின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும். அப்படிப்பட்ட தாயால்தான் எந்தவித பிரசவச் சிக்கல்களும் இல்லாமல், ஒரு ஆரோக்கியமானக் குழந்தையைப் பெற்றெடுக்க முடியும்.

## மார்புசளி நீங்க இயற்கை வைத்தியம்

சளியும் இருமலும் வந்துவிட்டால் நாம் படும் பாடு கொஞ்சநஞ்சமல்ல. கூடவே தொண்டைவலியும் வந்துவிட்டால் அவ்வளவுதான். சில வேளைகளில் உடலில் வெப்பம் அதிகரித்து காய்ச்சலாகவும் மாறிவிடும். பருவநிலை மாறும்போது இவை வருவதற்கான வாய்ப்புகள் அதிகம். சளி, இருமல் வந்துவிட்டால், அதிலிருந்து இயற்கையான வழிமுறைகளைப் பயன்படுத்தியே மீண்டுவிடலாம். எப்படி?

### உப்புநீரில் வாயைக் கொப்பளித்தல்

தொண்டைவலி வந்துவிட்டால், உடனே வெதுவெதுப்பான உப்புநீரில் வாய் கொப்பளிக்க வேண்டும். இது எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாத இயற்கையான வழிமுறை. தொண்டையில் ஏற்பட்ட வீக்கத்தைக் குறைக்கும் தொண்டை உறுத்தலை நீக்கும் சளியையும் குறைக்கும்.

### இஞ்சி

இஞ்சி, வறண்ட இருமலை எளிதில் நீக்கக்கூடியது. ஒரு சிறிய துண்டு இஞ்சியை எடுத்து, அதில் சிறிது உப்பைத் தூவவும். உப்பு கலந்த இஞ்சியை சில நிமிடங்களுக்கு நன்கு மெல்லவும். இஞ்சியோடு துளசி இலையையும் சேர்த்துக்கொண்டால், சளி, இருமலுக்கு நல்ல பலன் கிடைக்கும்.



### பூண்டு

நான்கு அல்லது ஐந்து பூண்டுப் பற்களை எடுத்துக்கொள்ளவும். அத்துடன் ஒரு கரண்டி நெய் ஊற்றிச் சேர்த்து பூண்டைப் பொரித்து எடுக்கவும். சூடு ஆறுவதற்குள் இதைச் சாப்பிட்டுவிட வேண்டும். பூண்டை நன்றாக நசுக்கி குழம்பு அல்லது சூப்பில் போட்டும் பயன்படுத்தலாம். சளி, இருமலை இயற்கைவழியில் நீக்கும்.

### ஆளி விதை

சிறிது ஆளி விதையை நீரில் கொதிக்கவைத்தால் பசை மாதிரி ஆகிவிடும். இதனுடன் இயற்கை ஆன்டிபயாடிக்குகளான (Antibiotics) எலுமிச்சைச் சாறு மற்றும் தேன் சேர்த்துப் பருகிவர தொண்டை வீக்கம் குறையும்.

### கருமிளகு தேநீர்

கருமிளகு இருமல், சளிக்கு மிக நல்ல மருந்து. கருமிளகு தேநீர் குடிப்பது தொண்டைவலியைக் குறைக்கும். ஒரு கப் வெந்நீரில் இரண்டு கரண்டி தேன், சிறிதளவு கருமிளகு சேர்த்துக்கொள்ளவும். இதை அப்படியே மூடிவைக்கவும். 15 நிமிடங்களுக்குப் பிறகு இதைக் குடிக்கலாம்.

### பால் மற்றும் மஞ்சள்

சூடான பாலில் மஞ்சள் சேர்த்துப் பருகுவது சளியைப் போக்கும். பால் மற்றும் மஞ்சளில் நம் உடலுக்கு நன்மை செய்யக்கூடிய பல பொருள்கள் உள்ளன. பொதுவாகவே, சளி போன்ற பாதிப்புகள் இல்லாத நாள்களிலும் பாலில் மஞ்சள் கலந்து குடிப்பதும் ஆரோக்கியம் தரும். குழந்தைகள்,



### எலுமிச்சை சாறு

ஒரு வாணலியில் 100 மி.லி. தேனை ஊற்றி, அதன் அடர்த்தி குறைகிற வரை சூடாக்கவும். இதனுடன் சிறிது எலுமிச்சைச் சாறு, லவங்கப்பட்டை சேர்த்துப் பயன்படுத்திவர சளி குறையும்.

### வெங்காய சாறு

ஒரு வெங்காயத்தை உரித்து நன்றாக நசுக்கிக்கொள்ளவும். அதனுடன் ஒரு கரண்டி எலுமிச்சைச் சாறு, தண்ணீர் சேர்த்து கொதிக்கவைக்கவும். இதனுடன் ஒரு கரண்டி தேன் சேர்த்துக்கொள்ளவும். சூடு ஆறிய பிறகு இதனைக் குடிக்கலாம். வெங்காயம் சளி, இருமலுக்கு மிக நல்ல மருந்து. வெங்காயத்தில் உள்ள பிளேவனாய்ட்ஸ் நிறமி, சளி மற்றும் இருமலை ஏற்படுத்தும் நுண்ணுயிரிகளுக்கு எதிராகச் செயல்படும் தன்மை

# திராட்சைச் செய்கை



உலகில் பரவலாகச் செய்கை பண்ணப்படும். திராட்சை இனம் விற்றஸ் வினிபெரா ஆகும். இது கரிபியன் கருங்கடல் ஆகியவற்றை அண்டிய பகுதிகளை பூர்வீகமாகக் கொண்டதாகக் கருதப்படுகின்றது. அமெரிக்காவைப் பூர்வீகமாகக் கொண்ட விரிஸ் லெப்ரஸ்கா இனம் பயிர்ச்செய்கைக்கென பிரபல்யமானது.

திராட்சை மூன்று நோக்கங்களுக்காகப் பயிரிடப்படுகின்றது. இதனை உடனடிப் பழமாக உண்ணலாம். வைன் உற்பத்தி செய்ய பயன்படுத்தலாம். உலர்த்தி, பயன்படுத்தலாம்.

வருடாந்தம் உலகின் மொத்த திராட்சை உற்பத்தியில் 10% வைன் உற்பத்திக்கெனவும், 28% உடனடிப் பழமாகவும், 2% உலர்த்த பழமாகவும் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றைத் தவிர பழச்சாற்றைப் பெறவும், 'ரின்'களில் அடைப்பதற்கும் அறுவடை செய்யப்பட்ட பழங்களைப் பயன்படுத்தலாம்.

திராட்சையை வெற்றிகரமாகச் செய்கைபண்ண விசேட பயிற்சி அவசியமாகும். விசேடமாக கத்தரித்தல், கொடிகளைப் படரவிடல் போன்ற முக்கியமான பராமரிப்பு முறைகளைச் சரியாக மேற்கொள்ளாதபோது விளைச்சல் அதிகளவில் குறையும் பயிர்களை தொடர்ச்சியாக அவதானிப்பது மிக அவசியமாகும். ஏனைய பழப்பயிர்களுடன் ஒப்பிடும் போது, திராட்சையைச் செய்கைபண்ண அதிகளவான ஆரம்ப மூலதனம்,அவசியமாகும். ஆனால் முறையாகப் பராமரிக்கும் போது திராட்சையிலிருந்து அதிகளவான இலாபத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இலங்கையில் செய்கைபண்ணக்கூடிய ஏனைய அனைத்து பழங்களையும் விட அதிக இலாபத்தைத் திராட்சை தரக் கூடியது. எனவே திராட்சையைத் திருப்திகரமாக செய்கை பண்ணக் கூடிய இடங்களில், ஏனைய பழப்பயிர்களை விட முன்னணி வகிக்கும் வல்லமை இதற்கு உண்டு. உள்ளூரில் இதனை சிறந்த விலைக்கு விற்பனை செய்யக் கூடியக இருப்பதால் விவசாயிகளிடையே நன்கு பிரபல்யமடைந்து வருகின்றது.

## தேவையான காலநிலை

வர்த்தக ரீதியில் இதனைச் செய்கை பண்ணவும், தரமான விளைவைப் பெறவும் திராட்சையைச் செய்கைபண்ண மிக உகந்த பிரதேசம், எமது நாட்டில் உலர் வலயமாகும். ஆனால் நீர்ப்பாசன வசதிகள் இருப்பது அவசியமாகும். கத்தரித்த பின் குறைந்தது மூன்று மாதங்கள் வரையாவது உலர் காலநிலை நிலவ வேண்டும். எனவே திராட்சைச் செய்கைக்கு மொத்த மழை வீழ்ச்சியின் அளவை விட வருடம் முழுவதும் அது எவ்வாறு பரவியுள்ளது என்பதே முக்கியமானதாகும். வாயு மண்டலத்தில் சாரீரப்பதன், வெப்பநிலை என்பன அதிகமான காலத்தில், இலைகளில் பூஞ்சண நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. சாரீரப்பதனும், மழைவீழ்ச்சியும் அதிகமாகும் போது பூக்கள் உதிர்வது அதிகரிக்கும் அதிகளவான காய்கள் வெடிப்பதற்கும் வாய்ப்புகள் உள்ளன.

திராட்சைத் தோட்டங்களைக் கடும் காற்றிலிருந்து பாதுகாப்பது அவசியமாகும். கடும் காற்றினால் முன் உயர்ந்து போவதோடு, கொடிகளும், காய்களும் பாதிக்கப்படலாம்.

மண் நீர் நன்கு வடிந்து செல்லக் கூடிய, இலகுவான, ஆழமான மண் திராட்சைச் செய்கைக்கு மிக உகந்தது. அதிகளவான களி காணப்படுமாயின் அது திராட்சைக்கு உகந்ததல்ல. மண் 1 – 2 மீற்றர் வரை ஆழமானதாக இருப்பின் பயிர்களின் வேர்கள் நன்கு வளர சந்தர்ப்பம் கிடைக்கும். கபில நிற மண் காணப்படும் சில பகுதிகள் திராட்சைச் செய்கைக்கு உகந்தவை அல்ல இதனைத் தவிர அதிக உவர் தன்மையான மண்ணிலும், அதிகளவான உவர் நீருள்ள பிரதேசங்களிலும் திராட்சையை திருப்திகரமாக செய்கைபண்ன முடியாது. உலர் வலயத்தின் நில அமைப்பிற்கேற்ப காணியின் உயர்வான இடத்தில் மண் 1 1 / 2 மீற்றர் ஆழமாக இருப்பதோடு, நீர் நன்கு வடிந்து செல்லக்கூடிய நீர்ப்பாசன வசதியுள்ள, சூரிய வெளிச்சம் நன்கு விழுகின்ற இடம் திராட்சைக்கு மிக உகந்தது. மழைக் காலத்தில் நிலத்தடி நீரின் மட்டம் நில மேற்பரப்பிலிருந்து குறைந்தது 2 – 3 மீற்றர் ஆழமாவது இருப்பது மிக முக்கியமானதாகும். பயிர்ச்செய்கை பண்ணப்படும் மண்ணின் பீ.எச். பெறுமானம் 6.5 – 7. வரை இருக்க வேண்டும். உகந்த வர்க்கங்கள் இலங்கையில் வர்த்தகரீதியில் பல வர்க்கங்கள் செய்கை பண்ணப்படுகின்றன.

1. காடினல் – பழங்கள் செந்நிறத்தைச் சார்ந்த ஊதா நிறமானவை, பழங்களின் தோல் மெல்லியது, கனிந்த பழங்கள் மிக இனிப்பானவை ஆகும். நல்ல மணம் வீசும். குலைகளில் காய்கள் ஐதாகக் காணப்படும். குலையில் உள்ள அனைத்து காய்களும் ஒரே நேரத்திலேயே கனியும். உடனடிப் பழமாகப் பயன்படுத்தலாம். கத்தரித்து 2 1/2 மாதங்களின் பின்னர் அறுவடை செய்யலாம்.

2. இஸ்ரேல் புளூ – பழங்கள் கடும் நீல நிறமானவை ஆகும். குலைகளில் காய்கள் நெருக்கமாகக் காணப்படுவதோடு, பெரும்பாலும் எல்லா காய்களும் ஒரே நேரத்தில் கனியாது. ஆனால் எல்லாக் காய்களும் கனிந்த பின்னர் அறுவடை செய்யலாம். பழங்களின் தோல் காடினலை விட தடிப்பானது. ஆனால் கனிகள் காடினால் போல இனிப்பானவை அல்ல. கனிகள் ஓரளவு கசப்புச்சுவையானவை. இதில் காடினலை விட அதிகளவான விதைகள் காணப்படும். உடனடிப் பழமாக உண்ணக் கூடியது கத்தரித்து 3 மாதங்களின் பின்னர் அறுவடை செய்யலாம்.

3. பிளக் மஸ்கட் பழங்கள் கடும் ஊதா நிறம் சார்ந்த கறுப்பு நிறமானவை ஆகும். காயொன்றில் 1 – 2 விதைகள் வரை காணப்படும். மெல்லிய தோல் உள்ளது. குலைகளில் காய்கள் ஓரளவு ஐதாகக் காணப்படும் காய்கள் ஒரே தடவையில் கனியும் இதற்கு 3 மாதங்கள் வரை செல்லும் உடனடிப்பழமாக உண்ணவும், வைன் தயாரிக்கவும் பயன்படுத்தும் வர்க்கமாகும்.

4. பிரெஞ்ச் எம்.ஐ. வெள்ளை வைனை உற்பத்தி செய்வதற்கு உகந்த வர்க்கமாகும். பச்சை நிறமான, காய்கள் ஓரளவு சிறிய காய்கள் குலைகளில் நெருக்கமாகக் காணப்படும். கனிகள் இளம் மஞ்சட்பச்சை நிறமானவை. குலையில் உள்ள காய்கள் அனைத்தும் ஒரே நேரத்திலேயே கனியும். கீழ்ப்பூஞ்சண நோய்க்கு எதிர்ப்பானது. 2002 இல் விவசாயத் திணைக்களத்தினால் பயிர்ச் செய்கைக்கென சிபாரிசு செய்யப்பட்டது.

நாற்று உற்பத்தி விதை, ஒட்டு முறை. காற்றுப் பதியம், தண்டுத்துண்டங்கள் என்பவற்றின் மூலம் நாற்றுக்களை உற்பத்தி செய்யலாம். ஆனால் எமது நாட்டில் வர்த்தகரீதியில் நாற்றுக்களை உற்பத்தி செய்ய உகந்த முறை தண்டுத்துண்டங்கள் ஆகும்.

தண்டுத்துண்டங்களின் மூலம் நாற்று உற்பத்திற்கு கொடிகளைத் தெரிவு செய்தல் நாற்றுக்களை உற்பத்தி செய்வதற்கு தெரிவு செய்யப்பட்ட கொடிகளிலிருந்து மாத்திரமே தண்டுத்துண்டங்களைப் பெறவேண்டும். இதற்கு அதிக விளைவைத் தரும். ஆரோக்கியமான, தரமான பழங்கள் உருவாகும். பிரதேசத்திற்கு மிக உயந்த வர்க்கத்தின் கொடியைத் தெரிவு செய்ய வேண்டும். கத்தரிக்கும் போதே தேவையான தண்டுத்துண்டங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

## நடுவதற்கு உகந்த காலம்

எமது நாட்டின் உலர் வலயத்தில் நிலவும் காலநிலைக்கேற்ப திராட்சையை நடுவதற்கான உகந்த பருவம் பொதுவாக ஜனவரி, மார்ச், ஜூன் – ஒகஸ்ட் மாதங்களாகும். கடும் மழை பெய்யும் போது நடுவது உகந்ததல்ல. கடும் மழைக் காலத்தில் நடும் போது, நாற்றின் வளர்ச்சி தடைப்படும் இதைத் தவிர நாற்றுக்கள் நோய்களால் பாதிக்கப்படலாம். ஏனைய பயிர்களைப் போலல்லாது. திராட்சையை மழைக்காலம் முடிந்து, அடுத்துவரும் காலத்தின் ஆரம்பத்திலேயே நடுகை செய்ய வேண்டும்.

## இடத்தைத் தெரிவு செய்தல்




சூரிய வெளிச்சம் நன்கு விழுகின்ற, கடும் காற்றினால் பாதிக்கப்படாத, நீர்ப்பாசன வசதியுள்ள இடமே திராட்சையைச் செய்கை பண்ண உகந்ததாகும். சமதரையான இடமாயின் மிக உகந்ததாகும். ஓரளவு சரிவான இடமாயின் சம உயரக் கான்களின் வழியே நீர்ப்பாசனம் செய்யக் கூடியவாறு மேடையை அமைக்கவும். இதனால் தோட்டத்திற்கு இலகுவாக நீரூற்றலாம். நடுகை இடைவெளி கொடிகளைப் பயிற்றுவிக்கத் திட்டமிடப்பட்டுள்ள முறைக்கேற்ப இடைவெளி வேறுபடும்.

1. பந்தல் முறை – தாவரங்களுக்கிடையே 7.6 மீற்றர். வரிசைகளுக்கிடையே 3.6 மீற்றர்

2. வேலி முறை தாவரங்களுக்கிடையே 3.6 மீற்றா வரிசைகளுக்கிடையே 1.8 மீற்றர்

3. செடி முறை தாவரங்களுக்கிடையே 1.8 மீற்றர் வரிசைகளுக்கிடையே 1. 8 மீற்றர்

நீர்ப்பாசனம் மழையில்லாத போது குறைந்தது 10 நாள்களுக்கொரு தடவையாவது நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். ஆனால் இது பிரதேசத்திற்கேற்ப வேறுபடலாம். திராட்சைத் தோட்டத்தில் இலைகள் நனையக் கூடியாறு நீர்ப்பாசனம் செய்வதால் பங்கசு நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள்அதிகமாக உள்ளன. முன்னர் குறிப்பிட்டது போன்று கத்தரிப்பதற்கு 5 – 7 நாள்களுக்கு முன்னர் நீர்ப்பாசனம் செய்வதை நிறுத்த வேண்டும். கத்தரித்து 3 – 4 நாள்களின் பின்னரே மீண்டும் நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். பூக்கள் உருவாகும் போது தோட்டத்திற்கு போதியளவான நீர்ப்பாசனம் செய்யாவிடில், பூக்கள் உலர்ந்து போவதோடு, இளம் காய்கள் உதிர்த்து விழுவதால் விளைச்சல் குறையும், அறுவடை செய்ய 10 நாள்களுக்கு முன்னர் நீர்ப்பாசனம் செய்வதை நிறுத்தவும். இதனால் கனிகளின் இனிப்புச் சுவை அதிகரிக்கும் திராட்சைத் தோட்டத்திற்கு உவர் நீரை நீர்ப்பாசனம் செய்ய வேண்டாம். மேற்பரப்பு நீர்ப்பாசனம் செய்வதாயின் கொடியைச் சுற்றி பேசின் போன்று இருக்கத்தக்கவாறு அமைந்து நீர்ப்பாசனம் செய்யவும். அதிக மழை பெய்யும் போகத்தில் தோட்டத்தின் பள்ளமான பகுதிகளில் நீர் தேங்க வாய்ப்புண்டு. இதனைத் தவிர்ப்பதற்கு உகந்த ஆழமான கானை அமைத்து, மேலதிகமான நீரை வடிந்தோடச் செய்ய வேண்டும். நுண் நீர்ப்பாசன முறைகள் திராட்சைக்குச் சொட்டு நீர்ப்பாசனம் (Drip irrigation), தூவற்பாசனம் (Sprinkler irrigation) ஆகிய நீர்ப்பாசன முறைகளைப் பயன்படுத்தலாம்.

களைக் கட்டுப்பாடு திராட்சைக் கொடியைச் சுற்றி 120 ச.மீ (4 அடி) வரை மண் வெட்டியால் கொத்தி விடயம், இரு கொடிகளுக்கிடையே உள்ள பகுதியில் கட்டுப்படுத்த முடியாத கோரை, அறுகு போன்றன காணப்படுமாயின். அவற்றின் நிலக்கீழ் பாகங்களுடன் பிடுங்கி அழிக்கவும். இல்லாவிடில் கொடிகளின் மீது படாதவாறு கிளைபோசைட் போன்றகளை நாசினியை விசிறயும். திராட்சைப் பந்தலிற்குக் கீழே கட்டுப்பாடில்லாது களைகள் வளருமாயின், பயிர்களில் பங்கசு நோய்கள் பரவ அதிக வாய்ப்புள்ளது. ஆனால் நன்றாக வளர்ச்சியடைந்துள்ள பந்தல்களின் கீழ் அதிகளவான களைகள் வளராது.

பசளை திராட்சையிலிருந்து திருப்திகரமான விளைவைப் பெற வேண்டுமாயின் சேதன, இரசாயனம் இரண்டையும் போதியாவில் இடவேண்டும். திராட்சைக்கு விசேடமாக அதிகளவான சேதனப்பசளைகளை கட்டாயம் இடவேண்டும். சேதனப்பசளை நாற்றுக்களை நடுவதற்கு முன்னரே நன்கு உக்கிய சாணம், பசுந்தாட்பசளை போன்றவற்றை இட்டு, நடுகைக் குழிகளை நிரப்பவும்.

இரசாயனப் பசளை – திராட்சைக்கு சிபாரிசு செய்யப்பட்ட இரசாயனப் பசளைகளை தனித்தனியாக வாங்கி இட முன் ஒன்றாகக் கலக்கவும். திராட்சைக்கு சிபாரிசு செய்யப்பட்ட சி.சி. பசளைக் கலவையைத் தயாரிக்க, யூரியா: செறிந்த சுப்பா பொசுபேற்று: மியூறியேற்றுப் பொட்டாசு என்பவற்றை 10:10:10 எனும் வீதத்தில் நன்றாகக் கலந்து தோட்டத்திற்கு இடலாம். நடுவதற்குத் தயார் செய்யப்பட்ட ஒவ்வொரு குழிக்கும் மேற்குறிப்பிட்ட கலவையில் 450 கிராம் பசளையை இட்டு மண்ணுடன் ஒன்றாகக் கலத்து விடவும், நாற்றுக்களை நட்டு 4 மாதங்களின் பின்னர் மேற்குறிப்பிட்ட கலவையில் 450கிராமை மீண்டும் இடவும்.முதலாவது தடவை கத்தரிந்த பின் ஒவ்வொரு கொடிக்கு 900 கிராம் பசளைவீதம் இடவும். கத்தரித்து 5 – 4 நாள்களின் பின்னர் இரசாயனப் பசளைகளை இட்டு நீருற்றவும்.

## நோய்கள்

கீழ்ப்பூஞ்சண நோய், தூள் பூஞ்சண நோய்

பூச்சிகளும் வேறு பீடைகளும்

இவைகளைச் சேதமாக்கும் பல புழுக்கள் இளம் இலைகளை உண்ணும். மோசமான தாக்கம் இல்லாதபோது பூச்சிகளைக் கையால் பிடித்து அழிக்கலாம்.

செதிற் பூச்சிகள், கறையான், கப்சிட் வண்டு

அறுவடை செய்தல் திராட்சையில் வர்க்கத்திற்கேற்ப கத்தரித்த பின் அறுவடை செய்யும் காலம் வேறுபடும். பொதுவாக இதற்கு 31/2 மாதங்கள் வரை செல்லும். நன்றாகக் கனிந்த திராட்சைக் குலைகளை மாத்திரமே அறுவடை செய்ய வேண்டும். அறுவடை செய்தபின் திராட்சை கனியாது.

அறுவடை செய்யும்போது வர்க்கத்திற்கேற்ப அதன் நிறத்தை கனிகள் அடைத்திருத்தல் வேண்டும். பச்சை நிறமான பழங்களை அறுவடை செய்யும்போது அவை இளம் மஞ்சள் – பச்சை நிறமாகவும் ஒளிபுக விடக் கூடியதாகவும் இருக்கும் திராட்சைக் குலையில் காய்கள் மேலிருந்து கீழ்ப்புறமாக கனியும் எனவே கீழேயுள்ள கனிகள் இனிப்புச் சுவையை அடைந்தவுடன் அறுவடை செய்யவும். அறுவடை செய்யும் போதும் பழங்களைச் சந்தைக்கு அனுப்புவதற்கு ஆயத்தம் செய்யும் போதும் பழங்களின் மேல் காணப்படும் சாம்பல் நிறமான பொருள் வெளியே செல்லாதவாறு அவதானமாக இருத்தல் வேண்டும். இச்சாம்பல் நிறமான பொருள் பழங்களிலிருந்து நீர் வெளியேறி உலர்வதைத் தடுக்கும்.

ஆக்கம்: யோ. உஸாந்தினி,
மாணவி,
NVQ தரம் 5,
யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்.

காலைக்கதிர் வார இதழ் Kalaikkathir

# நேர்காணல்

## Tharmini Beauty Parlour அழகுக்கலை நிறுவனத்தின் உரிமையாளர் திருமூர்த்தி தர்மினி உடனான நேர்காணல்.

நேர்கண்டவர் - திருமலை தட்சா




## “செய்ய முடிந்தவன் சாதிக்கின்றான் செய்ய முடியாதவன் விமர்சிக்கின்றான்”

**01) உங்களைப் பற்றிய சிறு அறிமுகம்?**

என்னுடைய பெயர் திருமூர்த்தி தர்மினி. எனது ஆரம்பகால அழகுப் பயிற்சி நெறியினை 2011இல் **Kesha Beauty Parlour** இல் கற்று பின்பு தேசிய தரச் சான்றிதழைப் பெறுவதற்கான பயிற்சியினை 2019 இல் **Abishath herbal beauty therapy & academy of AestheticÖ_ higher diploma** பயிற்சியினையும், **Beauty Aesthetic international** பயிற்சியினையும் முடித்து தேசிய தரச் சான்றிதழ் **NVQ level** 4இனையும் பெற்று தற்போது தம்பலகாமத்தில் **Tharmini Beauty Parlour** என்ற பெயரில் 10வருடங்களாக இத் தொழிலை முன்னெடுத்து வருகின்றேன்.

**02) அழகுக் கலைத் துறையில் உங்களுக்கு ஏற்பட்ட ஆர்வம் குறித்து?**

2001ஆம் ஆண்டில் உயர்தரக் கல்வியினை முடித்து விட்டு ஓர் அரச வேலையை தேர்ந்தெடுக்க வேண்டும் என்று ஓடி ஓடித் திரிந்து சலித்துப் போன நிலையில், அழகுக்கலைத் துறையில் இருந்த ஆர்வம் இத்துறையையும் தொழிலாகத் தேர்ந்தெடுத்து முன்னேறலாம் எனக் கருதி இத்துறைசார் கற்கையினை முறையாகப் பயின்று தற்சமயம் இத்துறையினை சுய தொழிலாக முன்னெடுத்து வருகின்றேன்.

**03) உங்களது அழகுக் கலை நிலையம் பற்றியும், அதன் சேவைகள் பற்றியும்?**

எனது அழகுக்கலை நிலையத்தில் 4பேர் கற்று முடித்து விட்டு பணியாற்றுகிறார்கள். இங்கு அழகுக் கலை சார்ந்த அனைத்து விதமான சேவைகளும் ஒழுங்கான முறையில் திருப்தியளிக்கும் வகையில் செய்யப்பட்டு வருகின்றன.




**04) தம்பலகாமம் பிரதேசத்தில் அழகுக் கலைத்துறை மீதான பார்வையும், வரவேற்பும் எவ்வாறு உள்ளது?**

எனது பிரதேசத்தில் முதன் முதலில் அழகுக் கலை நிலையம் ஒன்றினை அறிமுகப்படுத்தியமை என்னையே சாரும். இங்குள்ளவர்கள் அழகுக்கலை சேவையினைப் பெற்றுக் கொள்வதற்காக வெகுதூரம் செல்ல வேண்டியிருந்தது. அதனால் இந்நிலைமை மாறி தற்போது எனது நிலையத்திற்கான பார்வையும், வரவேற்பும் நன்றாக உள்ளதுடன் வாடிக்கையாளருக்கு எனது சேவையானது திருப்தியளிக்கும் வகையிலாகவும் உள்ளமை மென்மேலும் என்னை ஊக்கப்படுத்தி முன்னேற்றிச் செல்கின்றது.

**05) இத் துறையில் நீங்கள் முகங்கொடுக்கும் சவால்கள் பற்றி?**

இவ் உலகம் சவால்களும், போட்டிகளும் நிறைந்தது. இவை இரண்டும் இருந்தால் தான் எந்தத் தொழிலாக இருந்தாலும் முன்னேற முடியும். இத்துறையினை கற்கச் செல்வதே பல சவால்களை உடைத்தெறிந்துதான் செல்ல வேண்டியிருக்கும். அதைத் தாண்டி தற்பொழுது தொழில் ரீதியாகப் பார்க்கப் போனால் பல நவீன முறைகள் மாறிச் செல்ல அதற்கேற்ற வகையில் எங்களை தயார்ப்படுத்திச் செல்வதே பெரும் சவாலாக உள்ளது.

**06) தற்சமயம் எவ்வாறான அழகுக்கலை சேவையை வாடிக்கையாளர்கள் விரும்பி நாடுகின்றனர்?**

மணப்பெண் அலங்காரம், சிகையலங்காரம் என்பவற்றுடன் சருமப் பராமரிப்பு சேவைகளையும் விரும்பி நாடி வருகின்றனர்.

**07) இத்துறையில் நீங்கள் பெற்ற வெற்றிகள், விருதுகள் பற்றி?**

**NVQ Level 4** சான்றிதழ், **higher diploma, Aesthetic international certificate** போன்ற அனைத்தும் கிடைத்தமையே பெரும் வெற்றிதான். எனது பிரதேசத்தில் சிறந்த பெண் முனைவாளர் என்று கௌரவிக்கப்பட்டேன். இவைத் தவிர விருதுகள் பெருமளவிற்கு வாய்ப்புகள் கிடைக்கவில்லை.

**08) இன்று பல பெண்களும் சருமப் பிரச்சினைக்கு முகங்கொடுத்து வருகின்றனர். இது குறித்தும், அதற்கான தீர்வுகள் பற்றியும்?**

இன்று பல பெண்களுக்கும் உண்டான பிரச்சினையே! காரணம் சரியான பராமரிப்பு இன்மை, சரியான பரிந்துரை இல்லாத பாவனை முறை என பலவற்றைக் கூறலாம். இதற்குரிய தீர்வுகளாக முதலில் தங்களுடைய சருமத்தை முதலில் அடையாளங் கண்டு கொள்ளல், முறையாக பயிற்சி பெற்ற அழகுத் துறை நிபுணர்களின் வழிகாட்டலின் படி அழகுப் பாவனை முறைகளை பின்பற்றல், தரமான அழகு சாதனப் பொருள்களை உபயோகித்தல். இவ்வாறான ஒழுங்கு முறைகளைப் பின்பற்றும் போது அழகான, ஆரோக்கியமான சருமத்தினை கொண்டவராக இருக்க முடியும்.

**09) இத்துறை மூலமாக உங்களுக்கு கிடைக்கும் வருமானம் திருப்தியளிக்கின்றதா?**


ஆம். தற்போது எமது நாட்டில் நிலவும் மிகுந்த பொருளாதார நெருக்கடியால் என் கையே எனக்கு உதவி என்று இத்துறை மிகவும் எனக்கு கை கொடுக்கின்றது.

**10) நிறைவாக, சாதிக்க நினைக்கும் பெண்களுக்கு கூற விரும்புவது?**

சாதிக்க நினைக்கும் பெண்களே! எந்தத் துறையாக இருந்தாலும் முறையாகப் பயின்று விட்டு காலத்தை வீணடிக்காதீர்கள். அத்துறையில் முழுமையான நாட்டத்தைக் காட்டி சாதிக்க எத்தணியுங்கள்.

**செய்ய முடிந்தவன் சாதிக்கின்றான்.**
**செய்ய முடியாதவன் விமர்சிக்கின்றான்.**
**செய்ய முயலாதவன் பொறாமைப்படுகின்றான்.**

# கலைக் கதிர்



## இலக்கிய நயம்



# சீதையின் காதல்

காதல், காதல், காதல் இன்றேல்
சாதல் சாதல் சாதல் – ( குயில் பாட்டு)

என்றான் பாரதி, இதனை ஏன் இவ்வாறு கூறினான் என நான் பலமுறை யோசித்ததுண்டு. காதல் எனில் அன்பு, பக்தி, விருப்பம், ஆவல், வேட்கை, காமம் எனவெல்லாம் பொருள் கொள்ளலாம். இங்கு நாம் பார்க்கப் போவது ஒரு ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் இடையிலான அன்பு அல்லது காதல் என்பதனைப் பற்றித்தான். ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான காதல் உணர்வை இயற்கை படைத்ததற்குக் காரணம் ஒரு இனம் அழிந்து விடாமல் தொடர்ந்து வளர ஏதுவாக இருப்பதற்கும், அதற்கான முதல் படியாக இரு பாலிரிடையும் அன்பு செழித்து வளர்வதற்காகவும் தான் எனலாம். ஆகவே தான் காதல் போயின் எல்லாம் போயிற்று, சாதல் ஒன்றே எஞ்சி நிற்பது என்றானோ பாரதி!

இத்தகைய காதல் உணர்வு நூதனமானது. சிறிது சிந்தித்துப் பார்த்தால் இத்தனை புலவர்கள், எழுத்தாளர்கள் ஆகியோர் காதலைப் பற்றியே விதம் விதமாக ஏன் எழுதிக் குவித்துள்ளனர் என ஆராயலாம்! காதல் சம்பந்தமான உணர்வுகள் மனித குலத்துக்கு மட்டுமே உரிமையானதா என அறுதியிட்டுக் கூற இயலவில்லை. இக்கட்டுரையின் நோக்கமும் அதுவல்ல. காதல் சம்பந்தப்பட்ட அழகிய மென்மையான உணர்வுகள் பற்றி கற்ப கோடி காலங்களாக இருந்து வரும் இனிய நயங்களைப் பகிர்ந்து கொள்வது தான் இதன் நோக்கம்.

கண்ணோடு கண்ணிணை நோக்கி இதயங்கள் ஒன்றோடு ஒன்று கலந்து விட்ட நிலை. அன்புடை நெஞ்சங்கள் காதலில் ஒன்றுபட்டு விடுகின்றன. சீதையின் கண்முன் தோன்றி, கருத்தைக் கவர்ந்து, சிந்தையில் புகுந்து எண்ணத்தில் கலந்து நின்று விட்டான் அண்ணல். அவன் யாரென்று தெரியாத நிலையில் அவள் கலக்கம் கொள்கிறாள். உள்ளத்தைப் பறிகொடுத்தாயிற்று. எண்ணத்தில் நிறைந்தவனுடன் வாழ்க்கையை இணைத்துக் கொள்ள வேண்டுமல்லவா?

‘யாரவர்? அவரை எங்ஙனம் அறிந்து கொள்வேன்?’ எனப் பதைக்கிறாள்.

காரிருள் இரவு மிதிலாநகரின் கன்னிமாடத்தில் உறக்கமின்றி விழித்திருக்கிறாள் சீதை. உள்ளத்தைக் கொள்ளை கொண்டு சென்றவனின் நினைவு சுட்டெரிக்கிறது. தாபம் மிகுகின்றது.

கீற்று நிலா வானில் பளீரிடுகின்றது அதன் மெல்லொளியில் தொலைவில் மலை முகடுகள் தெரிகின்றன. ரசிக்க வேண்டிய இந்த அழகு இவளுக்குப் பெரும் துன்பத்தைத் தருகிறது. அத்துன்பத்தின் நடுவிலும் இயற்கையின் அழகைத் தன் இன்னுயிரைக் கவர்ந்தவனுக்குப் பொருத்தி நோக்கி இன்பம் காண்கிறாள்.

அந்த மேருமலையை எடுத்து நாண் பூட்டியது போன்ற ஒரு பெருத்த வில்லுடன், அதனைப் பற்றிய கையும், தூண்கள் போன்ற தோளும் கொண்டு, அம்புகள் செருகப் பெற்ற அம்பறாத் தூணியும், ஒளி மிகுந்த இந்தக் கீற்று நிலாவைப் போன்ற பூணூல் அணிந்த மார்பும் ஆகிய இவற்றைக் கொண்டவனை மீண்டும் காண முடிந்தால் இழந்த எனது உயிரை நான் பெற்றவளாவேன் அல்லவோ, என மறுகுகிறாள்.

கம்பன் கவிநயம் ஈண்டு நம் கருத்தைக் கொள்ளை கொள்கிறது. காதலை மட்டும் இங்கு அவன் பாடவில்லை சீதையின் பிரிவுத் துயரை மட்டுமே இங்கு அவன் கூறவில்லை இதை ஒரு வாய்ப்பாகக் கொண்டு அண்ணலின் அழகு வடிவை இன்னுமொரு முறை சொற்களில் வடித்துச் சுவைக்கிறான். நாமும் சுவைக்கத் தருகின்றான்! அவன் தோளும் கையும் முப்புரி நூல் அணிந்த பரந்த திருமார்பும் சீதை மட்டுமல்ல, கம்பன் உள்ளத்தையும் கொள்ளை கொள்ளும் அழகு வாய்ந்தனவாம்!

**நாண் உலாவு மேருவோடு நாண் உலாவு பாணியும்
தூண் உலாவு தோளும் வாளியூடு உலாவு தூணியும்
வாள் நிலாவின் நூல் உலாவும் மாலை மார்பும் மீளவும்
காணல் ஆகும் ஆகின் ஆவி காணல் ஆகுமே கொலாம்**

## மன்னவனின் தோள்சேர

மன்னவனின் தோள்சேர
மாமயிலாள் ஏங்குகிறாள்
மன்னவனோ போர்க்களத்தில்
மதகரியைத் தாங்குகிறான்

இன்னமுதாம் இதழ்ச்சுவையை
எண்ணியிவள் வாடுகிறாள்
‘என்னுயிரா என்நாடா’
என்றவன்போ ராடுகின்றான்

தன்னவனை அள்ளிக்கொள்ளத்
தளிர்க்கொடியாள் தேடுகிறாள்
இன்னுமொரு மதயானை
வீழ்த்தவவன் ஓடுகிறான்

கன்னற்றமிழ் பேசிநின்ற
காதலனை நினைக்கின்றாள்
பொன்னிகர்த்தோட் காதலனோ
குருதிமழை குளிக்கின்றான்.

இன்னுஞ்சற்றுப் பொறுப்பதன்றி
இந்தவிளந் தேவதைக்கு
உன்னும்வழி ஏதுமில்லை
உலகிலிது இயற்கையன்றோ.

- கந்தவனம் கோணேஸ்வரன். -

## பனிவிழும் பொழுது

நீர்ப்பரப்பின் அமைதி போலிருந்தது
உன் வர்ணிப்பின் வர்ணம் போர்த்திய
என் தோல்
சில நாட்களில் காற்றுப்போல
சலனங்களை விதைப்பாய்
அறுவடையில் சிற்றலைகள்
நிலவை பெரியதோர் கல்லாக
எறிந்த நாளில் உனது எதிர்பார்ப்பு
என்னை பரிநிர்வாணம் செய்தல்
நானோர் மலைப்பிரசங்கியாகவே
மாயமுற்றிருந்தேன்
திசை தெரியாத அமாவாசைக்காட்டிலே
துடுப்போடு வந்திருந்தாய் நண்பி
ஒரு சலனமுமில்லை
ஆனாலும் பிரளயங்கள்
காலங்காலமாக தொடரும் கதையில்
நீ ஒரு கள்ள கிருஷ்ணன்
பிறகு என் கோபங்களை
ஒளித்துக்கொள்கிறேன்
தேத்தணிக்கு வைக்கும் சுடுநீரில்
விடிகாலையில் வாய் கொப்புளிக்கும்
நீரில் கலைந்து கிடக்கின்றன
என் மேனி வர்ணங்கள்

- லலித்தா, திருகோணமலை -

## வரவேற்பு

ஒரு பிச்சை பாத்திரம்
என நகர்கிறது மனது
அதில் காதலை ஊற்றி
விட்டு நகர்கிறாள் தோழி
உடன்பிறப்புகள் போதும்
என கூவிய சேவலை
அறுத்து விருந்து படைக்க
விறகு கட்டைகள் போதவில்லை
ஒரு துளி மண்ணெண்ணெய்
தேடிய நெருப்பெட்டி
அதே தேநீருள் அதே காதலை
எச்சில்படுத்த வெறித்தபடி நான்
புதிதாய் ஊற்றிய தேநீரில்
கைகளால் கோலமிட்ட
மகளை ரசித்தப்படி
ஒரு புதிய புன்னகை மீண்டும்
தொலைந்த செருப்பில்
ஒன்றை கூட வீச மனமற்ற
தந்தைக்கு குதிச் சாப்பாத்து
கேட்கும் பேத்தியின்
அழுகை மட்டும் தெளிவாய்
கேட்கும் அதிசயம்
இப்போதைய வெற்றுக்
குவளையாய் தனித்திருக்கிறது
ஆசுவாசப்படுத்தும்
அந்த உடன் பிறவா
ஓர் அழைப்பிற்காக
காத்துக் கிடக்கிறது
இன்றைய பொழுதும்

- வசுமதி நிர்மல் -

# ஆயரின் பெயரில் அமைந்து அரும்பணியில் ‘பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்’ நிறுவனம்

## யாழ் ஊடக அமையத்துடன் இணைந்து புதிய ஊடகப்பணிகள் – 08

- கலாநிதி லூபன் மரியாம்பிள்ளை அடிகள் -
(ஊடக வருகை விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம்; ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர் - யாழ் பல்கலைக்கழகம் இயக்குனர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்)

**யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயர் மேதகு கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை பெயரிலே அமைக்கப்பட்ட பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் தொடக்கப்பட்ட கதை - அதற்கு ஓய்வு நிலை ஆயர் மேதகு கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையின் பெயர் கொடுக்கத் தூண்டப்பட்ட காரணம் மற்றும் அதன் பணிகளைத் தொடர்ந்து விளக்குகிறது இக்கட்டுரை.**

அண்மைக் காலமாக காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழில் அதிக படங்களை இணைத்திருந்தேன். இவ்வாறு அதிக படங்களை இணைத்தமையால் கடந்த 07 ஆண்டு காலமாக வெளியிடப்பட்டு வரும் காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழுக்கு என்றுமில்லாதவாறு அதிக அழைப்புக்கள் உள்நாட்டில் இருந்தும் வட்ஸ்அப் மூலமாக வெளிநாடுகளில் இருந்தும் வந்துள்ளன. இவ்வளவு காலமும் செய்து வந்த இந்தப் பணிக்கு ஒரே வாரத்தில் சம்பாவஷனை கிடைத்தது போல் மகிழ்ந்தேன்.

பெரிய கட்டுரையைக் கஷ்டப்பட்டுப் படிக்காமல் படங்களை பார்த்து இலகுவாக விடயங்களை புரிந்து கொள்ள காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் அன்பு நெஞ்சங்கள் விரும்புகிறார்கள்.

இன்றைய நவீன சமூக ஊடகங்களின் வெற்றிக்கு இதுவே முக்கிய காரணம். இனி வருங்காலங்களில் அதிக படங்களை இணைப்போம்.

இதில் எனது படங்கள் அதிகமாய் இருப்பது இவ்வாக்கத்தின் தன்மைக்கேற்ப தவிர்க்கப்பட முடியாதது என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

கடந்த ஞாயிறு தினம் (14.08.2022) வெளியான காலைக்கதிர் பத்திரிகையில் படங்களுக்கான விளக்கத்தில் சிறிய தவறு ஏற்பட்டதைப் பலரும் சுட்டிக் காட்டியிருந்தனர். காலைக்கதிர் பத்திரிகை ஆசிரியர் அவர்களுக்கு விடயத்தைத் தெரியப்படுத்தியபோது திங்கள் அன்று திருத்தங்களுடன் திரும்பவும் அவ்வாக்கத்தை வெளியிட்டிருந்தார். தவறைத் திருத்தி வெளியிட அனுமதித்தமைக்கு காலைக்கதிர் பத்திரிகை ஆசிரியருக்கு அன்பான நன்றிகள்.

பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் உருவாகக் காரணம் என்ன என்பது பலர் என்னிடம் கேட்ட ஒரு கேள்வி.



2000 ஆண்டுக்குரிய சிறந்த வடிவமைப்பைக் கொண்ட தமிழ்ப் பத்திரிகைக்குரிய விருதைப் 2001ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் திகதி மவுண்லெவணியா ஹோட்டலில் நடந்த இலங்கை பத்திரிகையாளர் சங்க விழாவில் விருதைப் பாதுகாவலன் ஆசிரியர் லூபன் மரியாம்பிள்ளை அடிகள் டெய்லி மிரர் பத்திரிகை ஆசிரியர் லலித் அழகக்கோனிடம் இருந்து பெற்றுக்கொண்டார்.

1992 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3ஆம் திகதி காரிருள் வேளை கிளாலிக் கடல் அலைகளை ஊடறுத்துக் கொண்டு விசைப் படகில் இரவோடு இரவாக மேளதாளங்கள், மாலை மரியாதைகள் எதுவும் இன்றி, போர்க்களமாய் அமைந்திருந்த யாழ் மறைமாவட்டத்திற்கு ஆயர் மேதகு கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை வந்தார். அவரை வரவேற்கக் கிளாலிக் கடல் கரையில் கூடி இருந்த குருக்களில் நானும் ஒருவன். அப்போது நான் எனது பி.ஏ.மற்றும் பி.ரி.எச். பட்டப்படிப்புக்களை முடித்த நிலையில் யாழ்ப்பாணம் புனித மாட்டீனார் குருமடத்தில் தங்கி இருந்தேன். ஆயர் யாழ்ப்பாணம் மறைமாவட்டத் தைப் பொறுப்பெடுத்த சிலவாரங்களில் அவரைச் சந்திக்கச் சென்றேன்.




சிறந்த பத்திரிகை அமைப்பைக் கொண்ட பத்திரிகைக்கான விசேட விருதை 24 யூன் 2002 ஆம் ஆண்டு மவுண்லெவணியா ஹோட்டலில் நடைபெற்ற பத்திரிகையாளர் விருது வழங்கும் வைபவத்தில் மேற்படி இலங்கை பத்திரிகையாளர் சங்க விருதை உப்பாலி பத்திரிகைக்குழு நிறுவனத்தின் ஆசிரியர் திலகரட்ண பண்டார டி சில்வாவிடம் இருந்து பாதுகாவலன் ஆசிரியர் லூபன் மரியாம்பிள்ளை அடிகளார் பெற்றுக்கொண்டார்.

இடையில் விடயத்துக்கு வருகிறேன்.

யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயர் மேதகு கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையின் பெயரை நிறுவனத்திற்குக் கொடுத்த காரணம் என்ன என்பதாகும். அதற்கான பதிலை நான் இவ்வாக்கத்தில் விளக்கும் விதமாக காவலூர் யோவான் அவர்கள் என்னுடன் மேற்கொண்டு ‘பாதுகாவலன்’ பத்திரிகையில் வெளியான நேர்காணலை நோக்குவோம்.

1. ‘பாதுகாவலன்’ பத்திரிகையின் ஆசிரியராக 10 ஆண்டுகள் பணியாற்றியுள்ளீர்கள். அதன் இயங்கியலில் புரிந்த சாதனைகள் எவை எனக் கருதுகிறீர்கள்?

பதில்: யாழ் மறைமாவட்டத்தின் அதிகாரபூர்வ ஏடான ‘பாதுகாவலன்’ பத்திரிகையின் ஆசிரியராகப் 10 ஆண்டுகள் (1997 - 2007) பணியாற்றியுள்ளேன். நான் இந்தியா சென்னை பூந்தமல்லி திரு இருதயக் கல்லூரியில் மெய்யியல் கல்வியை கற்றுக் கொண்டிருந்த போது ‘மௌன ஊர்வலம்’ என்ற ஒரு சிறுகதை எழுதி அப்போது பாதுகாவலன் பத்திரிகை ஆசிரியராக இருந்த அன்ரன் மத்தாயஸ் அடிகளாருக்கு அனுப்பி வைத்தேன். அது 23 நவம்பர் 1979ஆம் ஆண்டு பிரசுரமானது. இதுவே பாதுகாவலனுடனான என் முதல் தொடர்பு.

1989ஆம் ஆண்டு பாதுகாவலன் பத்திரிகை ஆசிரியராக இருந்த அமரர் ஈ.ஜே.அருமைநாயகம் அடிகளார் வெளிநாடு சென்ற போது தற்காலிக ஆசிரியராக பணியாற்றினேன். (24 நவம்பர் 1989 இதழ் 37 - 42). அதன் பின்னர் ஈ.ஜே.அருமைநாயகம் அடிகளார் நீர் கட்டாயம் பாதுகாவலன் ஆசிரியப் பணியை ஏற்கும் காலம் வரும் என்றார். நான் அதை பெரிதாக எடுக்கவும் இல்லை. அப்பணியை எதிர்பார்க்கவும் இல்லை.

1997ஆம் ஆண்டு கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் நிதியாளராகவும் ஆரம்ப மெய்யியல் பிரிவினருக்கு பயிற்றுவிப்பாளராகவும் பாட ஆசிரியராகவும் இருந்த போது இடப்பெயர்வு ஏற்பட்டு குருமடம் கிளிநொச்சிக்கும் பின்னர் மடுவிற்கும் இடம் பெயர்ந்தது. அங்கிருந்த போது ஆயர் என்னை பிலிப்பைன்ஸ் நாட்டிற்கு ஒரு மாத பயிற்சிக்கு அனுப்பினார். அங்கிருந்து வந்தவுடன் இராணுவத்தினரிடமிருந்து கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியை மீட்பதற்குப் புனித மாட்டீனார் குருமடத்தில் இருந்து ஆரம்ப மெய்யியல் பிரிவிற்கு தகுதிபெற்ற (1) இயேசுதாசன் மதி இளம்பருதி (2) அருளானந்தம் ஶ்ரீபன் (3) தார்சியஸ் நிரூபன் (4) ஈ.எஸ்.சி.மரியதாஸ் (5) நீக்கிலஸ் லெஸ்லி அன்ரனி (6) எழில்ரஜன் (7) எம்.எல்.தயாகரன் ஆகிய 07 மாணவர்களுடன் கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் ஆரம்ப மெய்யியல் பிரிவை ஆரம்பிக்குமாறு ஆயர் வேண்டினார்.

நான் அந்த 07 சகோதரர்களுடன் வளன்புரத்தில் குருத்துவப் பயிற்சி வாழ்வை ஆரம்பித்தோம். அமலமரித் தியாகிகளின் வளன்புரம் சிறிய குருமடத்தில் 07 மாணவர்களுடன் எட்வின் வசந்தராஜா அ.ம.தி.அடிகளார் இருந்தார். எம்மையும் இராணுவத்தினரையும் விட அப்பகுதியில் யாரும் அப்போது இருக்கவில்லை. நாள்கள் பல சென்றும் இராணுவத்தினர் கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியை விட்டு வெளியேறாத படியாலும் இராணுவத்தினர் இரவு வேளைகளில் வளன் புரத்தில் உள்ள எமது இல்லத்திற்கு வந்து தொல்லை தந்தபடியாலும் நாம் ஆயரின் அனுமதியுடன் வளன் புர இல்லத்தை விட்டு கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் இராணுவத்தினருடன் குடியமர்ந்தோம்.

02. அதாவது கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் இராணுவத்தினருடன் நீங்களும் ஏழு சகோதரர்களுடன் ஒன்றாக இருந்தீர்களா? கேள்விப்படாத செய்தியாக உள்ளதே?

பதில்: ஆம். உண்மைதான். புனித சவேரியார் கல்லூரியின் இறையியல் பகுதியில் நாம் இருந்தோம். புனித சவேரியார் கல்லூரியின் மெய்யியல் பகுதியில் இராணுவத்தினர் இருந்தனர். நீங்கள் சொன்னபடி இது ஒரு கேள்விப்படாத செய்திதான். இரா ணுவத்தினருடன் ஆரம்ப மெய்யியல் பிரிவினருடன் நான் சில காலம் தங்கியிருந்த இந்த செய்தி பெரிதும் அறியப்படாத ஆனால் உண்மைச் செய்தியாகும்.

மாலை வேளைகளில் அமலமரித் தியாகிகளின் புனித சூசையப்பர் சிறிய குருமட கூடைப்பந்தாட்ட திடலில் நாம் விளையாடுவது உண்டு. அந்தத் திடலின் கடற்கரைப் பகுதி மதில் முழுவதும் இராணுவத்தினரால் இடிக்கப்பட்டிருந்தது. பாஷையூரில் இருந்த இராணுவக் கப்ரன் றம்புக்கனையும் எம்முடன் வந்து எம்முடன் விளையாடுவார். இதனால் இராணுவத்தினருடன் ஒன்றாக இருக்கும் பயம் ஓரளவு நீங்கியது. இராணுவத்தினருடன் நாம் இருந்த நாள்கள் மறக்கப்பட முடியாத நாள்கள்.

(தொடரும்)

காலைக்கதிர் Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
கிறிஸ்தவ செய்தி




யாழ்ப்பாணம் மறைமாவட்ட அதிகாரபூர்வ ஏடான பாதுகாவலன் பத்திரிகை நூற்றாண்டுகளைத் தாண்டியும் ஓர் இலச்சினை இன்றி வெளிவந்து கொண்டிருந்தது. லூபன் மரியாம்பிள்ளை அடிகளாரால் பாதுகாவலன் பத்திரிகைக்கு ஒரு புதிய இலச்சினை 1997ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இப்புதிய இலச்சினை 15 செப்டெம்பர் 15 ஒக்ரோபர் 1997ஆம் ஆண்டு பாதுகாவலன் பத்திரிகையில் வெளியிடப்பட்டது.

இலச்சினையில் ஒளியும் வாழ்வும் உண்மையும் பாதுகாவலன் என்ற வசனங்கள் பொறிக்கப்பட்டு வேதாகம ஏட்டின் மேல் தீபம் ஒன்று அமைக்கப்பட்டு அது உலகிற்கு ஒளி தருவது போலவும் அந்தத் தீபஒளி அணைந்து போகாமல் இரண்டு பக்கமும் கரங்கள் பாதுகாப்பது போலவும், யாழ்ப்பாணத்தைக் குறிக்க இரண்டு பனை ஓலைகள் இருபக்கமும் சாத்தப்பட்டும் அமைக்கப்பட்டது.

# வீதியைப் புனரமைத்துத் தருமாறு கோரி பொகவந்தலாவை மக்கள் போராட்டம்!






பொகவந்தலாவை சிங்காரவத்தை தோட்டத்திற்கு செல்லும் பிரதான வீதியை புனரமைத்து தருமாறு கோரி தோட்ட மக்கள் பதாதைகளை ஏந்திய வண்ணம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சிங்காரவத்தை தோட்டத்தின் கிராம அபிவிருத்தி உறுப்பினர்களின் ஏற்பாட்டில் இந்த போராட்டம் சுமார் இரண்டு மணித்தியாலம் இடம்பெற்றது.

நோர்வூட் பிரதேச சபைக்கு உட்பட்ட சிங்காரவத்தை தோட்டத்தில் 300 இற்கும் மேற்பட்ட குடும்பங்களை சார்ந்த 1,800 இற்கு மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

பொகவந்தலாவை நகரத்திலிருந்து இந்தத் தோட்டத்திற்கு செல்லும் ஒன்பது கிலோமீற்றர் கொண்ட பிரதான வீதி குன்றும், குழியுமாக போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் காணப்படுகிறது.

இப்பாதையை நோயாளர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், முதியோர்கள் என அன்றாடம் தொழிலுக்கு செல்பவர்களும் பயன்படுத்துகின்றனர்.

இதேவேளை ரொக்கில், சிங்காரத்தை, வானக்காடு, மோரார் மேற்கு பிரிவு ஆகிய தோட்டங்களை சேர்ந்த மக்கள் பயன்படுத்தும் பாதையாகும்.

வாகன வசதிகள் இல்லாத காரணத்தால் பாடசாலை மாணவர்களும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

சுமார் 25 வருடங்களுக்கு மேல் பாதை சீர் செய்யாத காரணத்தால் மண் பாதையாகவே காணப்படுகிறது.

புனரமைப்பு செய்து தருவதாக அரசியல்வாதிகள் அடிக்கல் நாட்டிய போதிலும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாத காரணத்தால் இந்தத் தோட்டத்தை சேர்ந்த 200 இற்கும் மேற்பட்ட பொது மக்கள் பதாதைகளை ஏந்தி கோஷங்களை எழுப்பி பிரதான வீதியில் எதிர்ப்பை முன்னெடுத்தனர்.

இதன்போது உடனடியாக பாதையை செப்பனிட்டு தருவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன் வர வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகள் தேர்தல் காலங்களில் மாத்திரம் இந்தத் தோட்டத்துக்கு வருவதாகவும், தற்போது எங்களுடைய பிரச்சினையை எவரும் கண்டு கொள்வதில்லை எனவும் மாணவர்களின் கல்வி விடயத்தில் அக்கறை காட்டி இப்பாதையைப் உடனடியாக செய்து தர முன்வர வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

## தேவையான உரங்களை வழங்குவதற்கு ஏற்பாடு!

பெரும்போகத்துக்குத் தேவையான உரங்களை பொதுமக்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (சனிக்கிழமை) அநுராதபுரத்திற்கு விஜயம் செய்து வரலாற்று சிறப்பு மிக்க புனித தலங்களில் வழிபாடுகளில் ஈடுபட்டார். இதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## புதிய வாக்குச்சீட்டு அறிமுகம் விசேட தேவையுடையோருக்கு

விசேட தேவையுடையவர்கள் வீட்டிலிருந்தே வாக்களிக்கக்கூடிய வசதி எதிர்வரும் காலங்களில் ஏற்படுத்தி கொடுக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அதன் தலைவர் நிமல் புஞ்சிஹேவா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விசேட தேவையுடையவர்களுக்கு புதிய வாக்குச் சீட்டு அறிமுகப்படுத்தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## 4 ஆவது தடுப்பூசி உடன் செலுத்துக!

### சுகாதார அமைச்சு அறிவிப்பு

நான்காவது கொவிட் தடுப்பூசியை விரைவாக செலுத்திக் கொள்ளுமாறு பொதுமக்களை சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. இதேவேளை நாட்டில் குறைந்த எண்ணிக்கையிலான மக்களே நான்காவது தடுப்பூசி செலுத்தி கொண்டுள்ளனர் எனவும், மூன்றாவது தடுப்பூசியை செலுத்திக் கொள்ளாதவர்கள் தடுப்பூசியை செலுத்திக் கொள்ளுமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் வலியுறுத்தியுள்ளார்

மேலும் நான்காவது தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களுக்கு பக்க விளைவுகள் ஏதும் ஏற்பட்டதாக இதுவரை பதிவாகவில்லை என்பதோடு நாளாந்தம் 100 கொவிட் தொற்றாளர்கள் இனங் காணப்படுகின்றனர் எனவும் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

## திருகோணமலை கிண்ணியாவில் அரபிக் கல்லூரியின் பட்டமளிப்பு







(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டம், கிண்ணியா பிரதேச செயலகப் பகுதியில் இயங்கி வரும் நத்வதுல் புஹாரி அரபிக் கல்லூரியின் பட்டமளிப்பு விழா நேற்று மாலை குறிஞ்சாக்கேணியில் உள்ள ரீஆப் பிரிவு வளாகத்தில் இடம் பெற்றது.கல்லூரி அதிபர் அல் ஹாபிழ் அஷ்யெய்க் எஸ்.எம்.முனீர் தலைமையில் இடம் பெற்ற இந்தப் பட்டமளிப்பு விழாவில் கல்லூரியின் தலைவர் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ மஜீத் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

இதில் 2019,2020,2021,2022 ஆண்டுகளுக்கான வெளியான மாணவர்களுக்கான பட்டங்கள் இதன் போது வழங்கி வைக்கப்பட்டன. இதில் அல் ஹாபிழ்,அல் ஆலிம்,கத்முல் புஹாரி ஆகிய பட்டங்களை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.ஹனி மற்றும் பெற்றார்கள், நலன் விரும்பிகள் சமூக ஆர்வலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# சீனாவின் கைப்பொம்மையாக பான்சென் லாமா திபெத்திய பௌத்த சீலத்தை சிதைக்கும் முயற்சி

11 ஆவது பான்சென் லாமாவாக, பொம்மலாட்டத்தின் பொம்மை போல சீனா நியமித்திருக்கும் கியால்ட்சென் நோர்பு, சீனக் குணாதிசயங்கள் கொண்ட திபெத்திய பௌத்தம் என்ற சீனக் கூற்றை வலுப்படுத்தியும், முன்வைத்தும். வருவதால் சமீப காலமாக அடிக்கடி செய்திகளில் வருகிறார்.

திபெத்தில், சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் திணிக்க விரும்பும் பார்வை இதுதான். அதனை முன்னெடுத்து நிலைப்படுத்தும் சாதனையை மிகவும் தீவிரமாக மேற்கொள்பவர் கியால்ட்சன் நோர்புவைத் தவிர வேறு யாரும் அல்லர்.

திபெத்தியர்கள்தங்கள்நம்பிக்கையை விட்டு விலக மாட்டார்கள் என்று மக்கள் கருதுகிறார்கள், இது மிகவும் உண்மை. ஆனால் கியால்ட்சன் நோர்புவின் முன் முயற்சிகளுடன் நாம் இங்கு காணக்கூடியது என்னவென்றால், இந்த உண்மையை அறிந்த சீனா திபெத்திய பௌத்தத்தின் கதையை திபெத்தியர்களுக்கு மட்டும் மாற்ற விரும்புகிறது. திபெத்தை சீனா ஆக்கிரமித்ததில் இருந்து திபெத்திய பௌத்தர்கள் மட்டுமல்லர், திபெத்திய பௌத்தத்தில் ஈடுபாடு கொண்டு பின்பற்றும் சீனப் பெருநில மக்களும் சீனாவின்


சீனாவின் கைப்பொம்மையான பான்சென் லாமா

கட்டைவிரலின் கீழ்தான் நசியுண்டு கிடக்கின்றனர்.

திபெத்திய ஆசிரியர்களுடன் தற்போது இந்தியாவில் வசிக்கும் 15ஆவது தை சிடு ரின்போச்சேவின் (தலாய லாமாவின்) வழிகாட்டலைப் பின்பற்றும் புகழ்பெற்ற சீனநடிகர் ஜெட்லி இந்தப் போக்கை உறுதிப்படுத்துகிறார்.

கியால்ட்சென் நோர்பு என்பவர் சீனரால் நியமிக்கப்பட்ட பஞ்சன் லாமா ஆவார்.

உண்மையில், பஞ்சன் லாமாவானவர் கெலுக்பா பிரிவில் தலாய் லாமாவிற்குப் பிறகு மிக உயர்ந்த லாமா ஆவார். இந்த பாத்திரத்தை கடைபிடிக்கும் இந்த உயர் லாமாக்கள் (தலாய லாமாவும் பஞ்சன் லாமாவும்) அவர்களிடையே மாணவர் – ஆசிரியர் உறவை (குரு – சிஷ்ய உறவை) ஒவ்வொரு மறுபிறப்புடனும் அவர்கள் தங்களுக்குள் பல நூற்றாண்டுகளாகப் பேணிப் பகிர்ந்து கொள்கிறார்கள் என்று கருதப்படுகின்றது.

இருப்பினும், திபெத் மீதான சீனாவின் ஆக்கிரமிப்பிற்குப் பிறகு, இந்தத் தனித்துவமான உறவு சிதைந்தது. பெய்ஜிங் தலாய் லாமாவையும் தாஷி லுன்போ (பஞ்சன் லாமாவின் இருக்கை) மடாலயத்தின் மடாதிபதியான 11 ஆவது பஞ்சன் லாமாவையும் புறக்கணித்ததால் இன்னும் நிலைமை மோசமாகிவிட்டது. சீனத் தலைமை 11 ஆவது பஞ்சன் லாமா, கெதுன் சோக்கி நைமாவை அவரது குடும்பத்தினருடன் கடத்தி மறைந்திருப்பது மட்டுமல்லாமல், அவர்களின் சொந்த பஞ்சன் லாமாவை தம் கைப் பொம்மையாக நியமித்தது. இதன் மூலம் தலாய் லாமா மற்றும் பஞ்சன் லாமாவின் பெரிய கெலுக்பா பாரம்பரியத்தில் ஒரு மாபெரும் பிளவையும் சீனத் தலைமை உருவாக்கியது.

மேலும், 10 ஆவது பஞ்சன் லாமா


தாஷி லுன்போ (பஞ்சன் லாமாவின் இருக்கை) அமைந்துள்ள மடாலயப் பகுதி

வாக மிகவும் மதிக்கப்படும் லாமா மற்றும் கவர்ச்சியான நபர்களில் ஒருவரான சோக்கி கியால்ட்சன், திபெத்தில் கலாச்சாரப் புரட்சிக்குப் பிந்தைய காலத்தில் திபெத்தியர்களால் குறிப்பாக இந்த பாத்திரத்திற்காக போற்றப்பட்டு மதிக்கப்பட்டார். அவர் திபெத்திய பௌத்தத்தை மட்டுமல்ல, திபெத்திய மொழி மற்றும் கலாச்சாரத்தையும் திபெத்தியர்கள் கடந்த காலத்தின் கொடூரங்களை மறந்து பெருமைமிக்க சமூகமாக மாற உதவினார்.

அவர்களின் சொந்த பஞ்சன் லாமாவை சீனா தலையிட்டுத் தானே நியமித்தமை, திபெத்தியர்களுக்கு படிப்படியாக அதிகாரம் அளித்து வந்த இந்த மரபு மற்றும் சக்திவாய்ந்த வழிமுறையை அப்படியே துண்டாடி நிறுத்தச் செய்தது.

சீனாவினால் அவர் நியமிக்கப்பட்டு அவர் வயதுக்கு வந்ததிலிருந்து, திபெத்திய பௌத்தத்திற்கான பெய்ஜிங்கின் (சீனத்தின்) அலங்காரக் காட்சிப் பொருளாக – ஈடுசெய்ய முடியாத சீன முகமாக – ஜியால்ட்சென் நோர்பு தி பஞ்சன் லாமா இருந்தார். அவர் அணிவகுத்து அழைத்துச் செல்லப்பட்டு, தேவைகள் வரும்போதெல்லாம் மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்பட்டார்.

ஆயினும், ஜனாதிபதி ஜி ஜின்பிங் கடந்த ஆண்டு லாசாவிற்கு விஜயம் செய்தபோது அந்த அலங்கார இடம் கூட அவருக்கு வழங்கப்படவில்லை. அவர் அங்கு அழைக்கப்படாமை கூட உண்மையில் சீனத் தலைமை திபெத்திய பௌத்தத்தை மறந்து விட்டது – அது பற்றி ஒருபோதும் சிந்திக்கவில்லை – என்பதையே குறிக்கிறது.


இந்தியாவின் கட்டுப்பாட்டில் உள்ள தர்மசாலாவில் இருக்கும் தலாய் லாமா

ஆயினும்கூட, பஞ்சன் லாமா இப்போதும் பெய்ஜிங்கிடமிருந்து (சீனாவிடமிருந்து) இருந்து தனக்குக் கிடைக்கும் கட்டளைகளைப் பின்பற்றிச் செயற்படுகிறார். மேலும் சீனப் பண்புகளுடனான திபெத்திய பௌத்தமே முன்னோக்கிச் செல்லும் வழி, திபெத்திய பௌத்தத்தைப் பின்பற்றுபவர்கள் திபெத்திலிருக்கும் சமூகத்திலிருந்து தொடர்புகளை தாய்நாட்டுடன் (சீனாவைக் குறிக்கும்) இணைத்துக் கொள்ளும் விதத்தில் துண்டிக்க வேண்டும் என்று தொடர்ந்தும் பிரசங்கித்து வருகிறார்.

### திபெத்திய பௌத்தத்தின் கதை மாற்றத்தின் தாக்கம்

பஞ்சன் லாமா கடந்த ஓகஸ்ட் 2 ஆம் திகதி தாஷி லுன்போ மடாலயத்திற்குச் சென்றார் எனக் கூறப்பட்டது, மேலும் கடந்த ஆண்டு சங்டிங் மடாலயம் மற்றும் லோகா நகரத்திற்கும் சென்றிருந்தார். இங்கு ஒவ்வொரு வருகையின் நோக்கமும் 'திபெத்திய பௌத்தத்தின் மத நிலைநிறுத்தம்' மற்றும் 'சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு முழுமையான மரியாதை'என்று காட்டப்பட்டது. திபெத்திய பௌத்தத்தின் கதையை மாற்றும் நோக்கத்தில் பலவந்தமாகவோ அல்லது உள்நோக்கமாகவோ இத்தகைய நடவடிக்கைகளில் பங்கேற்பது சீனாவிற்கு மிகவும் சாதகமாக உள்ளது.

சின்ஹுவாவின், 'பஞ்சன் லாமா, திபெத்திய பௌத்தத்தைப் பின்பற்றுபவர்களை ஆற்றுப்படுத்தும் சமுதாயம், தாய்நாடு' எனத் தலைப்பிடப்பட்ட செய்திக் கட்டுரையில், 'சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையைத் தயக்கமின்றி நிலைநிறுத்துவது ஐயத்திற்கு இடமில்லாத – பின்னிற்கக்கூடாத பணி' என்று பஞ்சன் லாமா குறிப்பிட்டுள்ளார்.

கைப்பாவையான பஞ்சன் லாமா தலைமையின் இந்த நடவடிக்கைப் போக்குகள், திபெத்திய பௌத்தத்தை சீனத் தலைமை கையாளும் விதத்தில் 'டெக்டோனிக்' கட்டமைப்பு மாற்றங்களுக்கு வழிவகுத்தது. அவை:-

1. சமூக ஊடகங்கள் மற்றும் தொழில்நுட்பம் மூலம் மத நடவடிக்கைகளில் ஈடுபடத் தடை.

2. மதக் குழுக்களுக்கான நிர்வாக நடவடிக்கைகள், 2019 இந்த நிறுவனங்களின் செயல்பாட்டை நேரடியாகத் தலையிட்டு நிர்வகிக்கும் கொள்கை.

3. சீனாவின் பிரதான நிலப்பரப்பில் திபெத்திய பௌத்தத்தை தடை செய்வதல் (அங்கு சீனர்கள் திபெத்திய பௌத்தத்தை கற்கவும், அதில் வசிக்கவும் விரும்புகின்ற போதிலும்)

4. திபெத்திய மதத் தலைவர்களின் புகைப்படங்களைத் திபெத்தியர்கள் சித்திரித்து வைத்திருப்பதை அவமதிப்பது மற்றும் தடுப்பது.

5. ஆணை எண். 5, திபெத்திய மறுபிறவி லாமாக்களின் சான்றிதழை (துல்குஸ் என அறியப்படு கிறது) சீன அதிகாரிகளால் மட்டுமே இறுதி செய்ய முடியும் என்ற உத்தரவு.

திபெத்திய பௌத்தத்தை அழிப்பதிலும், நிர்மூலமாக்குவதிலும் பெய்ஜிங்கில் இருந்து எடுக்கப்பட்ட தினசரி வளரும் நடவடிக்கைகளுக்கு மத்தியில் –

இந்த தேவையற்ற கொள்கைகளை கடைபிடிக்காத தனிநபர்கள் மீது கடுமையான அடக்குமுறைகள், தண்டனைகள், கொலைகள், மிரட்டல்கள், துன்புறுத்தல்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படுகின்றன.

ரேடியோ ப்ரீ ஏசியாவின் செய்தி, சீனாவின் சிச்சுவான் மாகாணத்தின் ஒரு பகுதியாக இருக்கும் இரண்டு மாவட்டங்களின் தலைவர்களை உள்ளூர் திபெத்தியர்கள் தங்கள் செல்வாக்கு மிக்க மடாலயத்தின் நாடுகடத்தப்பட்ட தலைவரான கீர்த்தி ரின்போச்சியை (தற்போது தர்மசாலாவில் வசிக்கிறார்)ஒகஸ்ட் 8 ஆம் தேதி அவரது 80 ஆவது பிறந்தநாளின் போது, எந்த வகையான ஒன்லைன் இடுகையின் மூலம் கௌரவிப்பதைத் தடுக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது என்று தெரிவித்தது.

சீன ஆக்கிரமிப்பு மற்றும் திபெத்தில் வாழும் திபெத்தியர்கள் தற்போது எதிர்கொள்ளும் அடக்குமுறை வெளிப்பாட்டின் போக்கை இது காட்டுகிறது.

திபெத்திய பௌத்தத்தை முழுமையான அரசியல் நிர்மூலத்துக்கு உட்படுத்தி, விரும்பிய முடிவைப் பெறுவதற்கு பெய்ஜிங் தனது சொந்த சட்டத்தையும் தேவையானால் மீறும். அத்தோடு பெய்ஜிங் தனது அதிகார பலத்தையும் தந்திரத்தையும் எப்படி ஒவ்வொரு தடவையும் பயன்படுத்துகிறது என்பதற்கு இது மேலும் ஒரு சான்றாகும்.

பல திபெத்தியர்களுடன் தலாய் லாமாவும் திபெத்தை விட்டு வெளியேறத் தள்ளப்பட்டு, அவர்களின் சீன அடக்குமுறையாளர்களால் அகதிகளாக மாறி 60 ஆண்டுகளுக்கும் மேலாகிவிட்டது. இருப்பினும், திபெத்திய பௌத்தம் திபெத்தில் எப்போதும் வலுவாகவும் ஆற்றல் மிக்கதாகவும் உள்ளது. கலாச்சாரப் புரட்சியால் நிபந்தனையின்றி அதிர்ச்சியடைந்த திபெத்தியர்களுக்கு அவர்களின் பௌத்தம் மூல உத்வேகமாகவும் உதவியாகவும் இருந்து வருகிறது. இருந்தும், திபெத்திய அடையாளத்தின் மூலக்கல்லாக அதை அங்கீகரித்த சீனா, அதை இடித்தழிப்பதில் முழு மும்முரமாக – முனைப்பாக – உள்ளது.

ஜி ஜின்பிங் ஆட்சிக்கு வந்ததில் இருந்து திபெத்திய பௌத்தத்தின் இந்த அழிவு வேகமெடுத்துள்ளது, இப்போது அவரது மூன்றாவது பதவிக்காலம் ஏறக்குறைய உறுதியாகிவிட்ட நிலையில் (நவம்பரில் சட்டமன்ற குழுவின் உறுதிப்படுத்தல் தேவை) திபெத்திய பௌத்தத்தின் மீதான இந்த தொடர்ச்சியான தாக்குதல் முன்னெப்போதையும் விட முழு முனைப்புடன் அதிகமாகத் தெரிகிறது.

**(மூலம்: 'திபெத் பிரஸ்')**

# கன்னத்தில் வீழ்ந்த இராஜதந்திர அறை!



- நடராசா லோகதயாளன் -

இலங்கை போன்ற – பொருளாதாரத்தில் வங்குறோத்தடைந்த – ஒரு சிறிய நாடு இந்தியாவையும் மீறி சீனாவின் கப்பலை அனுமதித்தமை புதுடில்லியின் கன்னத்தில் அடித்தமை போன்றது என இந்தியாவின் ஆய்வாளர்களே கூறும் அவலத்திற்கு இந்திய நிலைமை தள்ளப்பட்டுள்ளது.

இந்தியாவின் பாதுகாப்பு இன்று இலங்கை என்னும் சிறிய நாட்டில் ஏலம் விடப்படும் நிலைமையில் உள்ளது.

அதனைத் தடுக்க வேண்டுமானால் இந்தியா விரும்பியோ விரும்பாமலோ ஈழத்தின் பக்கம் செயல்பட வேண்டும் என்ற கருத்து இருந்தாலும், 1983 ஆம் ஆண்டு முதல் அது வலியுறுத்தப்பட்டாலும், ஒரு 'துன்பியல்' சம்பவம் இடைவெளியை அதிகரித்தது.

இருந்தபோதும், இந்தியா எம்மைஒ பகையாக கருதினாலும், ஈழத்தமிழர்களை பகையாக கருத மாட்டாது, அதனால் இந்தியாவின் பகைவர்கள் இலங்கையை அண்ட முடியாது என்ற அடிப்படையிலேயே விடுதலைப் புலிகளின் செயல்பாடுகள் இருந்தன.

இதற்கு உதாரணம் ஒன்றைப் பார்க்கலாம். 1996 ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்து புலிகள் வன்னிக்கு பின்வாங்கிய காலத்தில், முல்லைத்தீவு நகரில் சுமார் 2 ஆயிரம் இராணுவத்தினருடன் இருந்த இராணுவ முகாம் இலக்கு வைக்கப்பட்டு முழுமையாக புலிகளால் வெற்றிகொள்ளப்பட்ட ஓராண்டின் பின்னர் – அதாவது 1997 ஆண்டு செப்ரெம்பர் மாதம் 09ஆம் திகதி – இதே சீனாவின் கப்பல் ஒன்றின் மீது – புல்மோட்டையில் கனிய வளம் ஏற்ற வந்த கப்பல் மீது – புலிகள் அஞ்சாது தாக்குதல் தொடுத்த துணிகரச் சம்பவம் இடம்பெற்றது.



அது இலங்கை கடற்படையின் கப்பல் என எண்ணியே முதலில் தாக்குதல் திட்டமிடப்பட்டபோதும் பின்னர் அது சீனக் கப்பல் என இனங்கானப்பட்டது. இதனால் தாக்குதலைத் தவிர்க்க எண்ணியபோது விடுதலைப் புலிகளின் தலைமை, இரு காரணத்திற்காக அதன்மீது தாக்குதலை மேற்கொள்ள இணங்கியதாக அப்போது இரண்டாம் நிலை தலைவராக இருந்த ஒருவர் பின்னாளில் நினைவு கூர்ந்தார்.

ஒன்று – அது இந்தியாவின் பகைமைநாடு. அதில் சில நேரம் ஆயுதம் எடுத்து வரப்படலாம். அதை அங்கு அனுமதிப்பது இந்தியாவுக்கும் நல்லதல்ல.

இரண்டாவது – எமது வளத்தை சுரண்ட எவர் முற்பட்டாலும் இதுவே முடிவு.

இந்த அடிப்படையில் அந்த முடிவை அறிவித்ததாக அவர் நினைவு கூருகின்றார். சீனா என்பது எவ்வளவு பெரிய நாடு என்ற அச்சம் அற்ற துணிவு அது. இன்றும் எவருக்கும் அந்த துணிவு இல்லை என்பதன் வெளிப்பாடே இன்று இந்தியா இவ்வாறு ஆபத்தில் சிக்கி தவிக்கின்றது.

அதாவது 1997 ஆம் ஆண்டு புல்மோட்டையில் உள்ள இல்மனைற் தொழிற்சாலையில் இருந்து கனிய வளத்தை ஏற்ற வந்த சீனக் கப்பல் மீது தாக்குதல் இடம்பெற்றது. இவ்வாறான சம்பவங்கள் அன்றே இந்தியாவிற்கான பாதுகாப்பு வேலியாக அமைந்தன.

### இந்தியாவின் பாதுகாப்பு இலங்கையில் பணயம் வைக்கப்படுகின்றது

இந்த சூழலில்தான், 'வரும் ஆனால் வராது' என 'பூச்சாண்டி' காட்டிய யுவான் வாங்க் – 05 இலங்கைக்குள் வந்து விட்டது என்பதன் மூலம் பாரிய அச்சுறுத்தல் இந்தியாவிற்கு விடப்பட்டுள்ளது என்பதில் எந்தவிதமான சந்தேகமும் கிடையாது.

சீனாவின் யுவான் வாங்க் – 05 மற்றும் பாகிஸ்தானின் தைமூர் கப்பல் ஆகியவை இலங்கை நோக்கிப் புறப்பட்ட ஒரு சில நாள்களிலேயே அவை பற்றிய தகவல்கள் இந்தியத் தரப்பிற்கு சென்றுவிட்டன.

பாகிஸ்தான் கடற்படையின் தைமூர் கப்பலைவிட சீனாவின் கப்பலின் சக்தி அபாரமானது. இந்த கப்பல் இலங்கை வருவதற்கு இலங்கை அரசிடம் ஜூன் மாதம் 28 ஆம் திகதியே உத்தியோகபூர்வமாக அனுமதி கோரப்பட்டது.

இவ்வாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு ஜூலை மாதம் 12 ஆம் திகதி அனுமதிக்கான சிபார்சு வழங்கப்பட்டுள்ளது.

இருப்பினும் ஜூலை 14 அன்று வெளிவிவகார அமைச்சினால் உறுதியான அங்கீகாரம் அளிக்கப்பட்ட நிலையில் கப்பலின் பயணம் உறுதி செய்யப்பட்டது. இருந்தபோதும இக்காலப்பகுதியில் இந்தியாவால் இவ்விடயத்தை அறிந்துகொள்ள முடியவில்லை.

இதனையடுத்து, ஜூலை மாதம் 21 ஆம் திகதி சீனாவில் இருந்து யுவான் வாங்க் – 05 இலங்கை நோக்கிப் புறப்பட்டது.

காலம் தாழ்த்தி விடயத்தை அறிந்த இந்தியா சீனாவின் விண்வெளி மற்றும் செய்மதி ஆராய்ச்சிக் கப்பலின் இலங்கை வருகையக் கட்டுப்படுத்த துடிதுடித்தது. அதனால் இலங்கை மீது உச்ச பட்ச இராஜதந்திர அழுத்தங்களை உபயோகித்தும் முயற்சி வெற்றியளிக்காத நிலையில் இலங்கையின் பொருளாதார நெருக்கடியைக் காண்பித்து மிரட்டியது. இதனால் ஒகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி கப்பலின் வருகையை ஒத்திவைக்குமாறு இலங்கை வெளிவிவகார அமைச்சு சீனத் தூதரகத்திற்கு உத்தியோகப்பூர்வமாக எழுத்தில் அறிவித்தது.

கப்பல் வருவதற்கு மூன்று நாள்கள் எஞ்சியிருந்த நிலையில் பயணத்தை ஒத்திவைக்குமாறு இலங்கை அரசாங்கத்தினால் கப்பலுக்கு அறிவிக்கப்பட்டது. இருந்தபோதும் அதே பொருளாதார நெருக்கடியை காண்பித்து சீனாவும் இலங்கையை மிரட்டியது. இதனால் 'திரிசங்கு' நிலைமைக்கு உள்ளானது இலங்கை அரசு.

இதன்போது தமது அரசியலையும் மஹிந்த தரப்பு மேற்கொள்ளத் தவறவில்லை. அதாவது இந்த அனுமதி ஏதும் தமக்குத் தெரியாது ஜீ.எல்.பீரிஸ்தான் வழங்கி விட்டுச் சென்றுவிட்டார் எனக் கூற முற்பட்டது.

சீனாவின் அதிநவீன செயற்கைக்கோள் ஆய்வு கப்பலான இந்த 'யுவான் வாங்க் 5' ஆனது 222 மீற்றர் நீளமும், 26 மீட்டர் அகலமும் கொண்டது. இந்த கப்பல் 11 ஆயிரம் தொன் எடைகொண்ட பொருள்களை சுமக்கும் வல்லமை கொண்டது. கடல் சார் கண்காணிப்பு, செயற்கை கோள் தொழில்நுட்பத்தை கொண்டதுடன் 750 கி.மீ. சுற்றளவுக்கு இருக்கும் ஒவ்வொன்றையும் துல்லியமாக ஆய்வு செய்யக்கூடியது எனவும் கூறப்படுகின்றது.

இதன் காரணமாகவே இந்தியா கடும் முயற்சி செய்தும் தமது பிடி கைநழுவி சீனாவின் கையே ஓங்கும்



என்பதனை அறிந்த இந்தியா, அவசர அவசரமாக அமெரிக்காவின் உதவியினையும் நாடியது. இதற்காகாக உடனடியாக இந்தியாவின் 'கோவா' பகுதியை அண்டிய பகுதிக்கு அமெரிக்காவின் கப்பல் ஒன்றும் திருப்பப்பட்டது.

செய்மதி மற்றும் விண்வெளி ஆய்வுக்குரியது எனக் கூறப்பட்ட கப்பல், சீனாவிலிருந்து புறப்படும்போது 40 கி.மீ வேகத்தில் புறப்பட்டது. அதன் பின் தாய்வானிலிருந்து 35 கி.மீ வேகத்திலும் இலங்கையை அண்டிய கடற்பரப்பினை அண்மித்தபோது 6 கி.மீ ஆகவும் காணப்பட்ட நிலையில் 14 ஆம் திகதி 3 கி.மீ வேகத்திலும் காணப்பட்டது. இதன் பின்பே 16 ஆம் திகதி காலையில் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை அது அடைந்துள்ளது.

யுவான் வாங்க் 05 விடயத்தில் சீனா மற்றும் இந்தியாவின் இராஜதந்திர அழுத்தங்களில் சீனாதான் பலமான நிலையில் இருந்தது என்பதோடு இந்தியா இராஜதந்திர தோல்வி அடைந்தது மட்டும் வெளிப்படையாகி விட்டது. இந்தியாவின் விடயத்தில் ஈழத் தமிழர்களின் நிரந்தர இருப்பே இந்தியாவின் திடமான பாதுகாப்பு என்பது இந்தியாவிற்கு மீண்டும் ஒருமுறை நிரூபிக்கப்பட்டிருப்பதோடு, ஈழத்தமிழர்கள் விடயத்தில் அதிக கரிசனை செலுத்த வேண்டும் என ஈழத் தமிழர்கள் கருதுகின்றனர்.

### நிபுணர்கள் கருத்து

இந்திய பாதுகாப்பு விடயங்களில் மிகவும் செல்வாக்குச் செலுத்தும் ஆய்வாளரான பிரம்ம செல்லன்னே இந்த சீனக் கப்பல் வந்த விடயம் தொடர்பில் தனது ருவிட்டரில் பதிவு செய்துள்ளார்.

அதில் இலங்கை மாதிரியான ஒரு வங்குறோத்துள்ள சிறிய நாடு, சீன கப்பலை அனுமதித்தமை புதுடில்லியின் கன்னத்தில் அடித்தமை போன்றது. இது இராஜதந்திர ரீதியிலான அறை எனவும் குறிப்பிட்டுள்ளதோடு, இது இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையின் தோல்வியையும் இந்தியாவின் எல்லைக்குள்ளேயே சீனா செல்வாக்கு செலுத்தியுள்ளதையும் எடுத்துக் காட்டுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேநேரம் இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு இலங்கைக்கு இந்தியா கடந்த 18 மாதங்களிற்குள் 3.8 பில்லியன் டொலர் உதவி புரிந்துள்ளது.

இருந்தபோதும், இலங்கை இந்தியாவிற்கு அழுத்தம் கொடுக்கக்கூடிய செயலை அதிகமாக மேற்கொண்டால்தான், இந்தியாவின் அதிக உதவி கிட்டும் என்ற தந்திரத்தை இலங்கை கையாள்கின்றதோ தெரியவில்லை.

### இந்திய கண்காணிப்பு விமானம் இலங்கையிடம்

இந்தியாவிடம் இலங்கை அரசு 2018ஆம் கோரிக்கை விடுத்த கடல் கண்காணிப்பு விமானம் ஒன்றை, இந்தியா அவசர அவசரமாக இலங்கைக்கு இப்போது வழங்கியுள்ளது. இவ்வாறு வழங்கப்பட்ட டோர்னிகர் விமானத்தை இயக்கவென இந்திய விமானப்படையின் 15 அதிகாரிகள் 4 மாதங்கள் இலங்கையிலேயே தங்கவுள்ளனர்.

இவ்வாறு தங்கியுள்ளவர்கள், இந்த விமானம் மூலம், சீனாவின் கப்பலையும் முதல்கட்டமாக கண்காணிப்பதன் மூலம், சீனாவின் கப்பலை இலங்கைக்குள் விட்டு சீனாவைத் திருப்திப்படுத்திய இலங்கை அரசு, அதனை கண்காணிக்கும் வல்லமை கொண்ட இந்தியாவின் விமானத்தையும் இலங்கைக்குள் விட்டு இந்தியாவையும் திருப்திப்படுத்தியதாச்என்ற பலமான கேள்வியும் எழுந்தாலும் அதில் திருப்திகொள்ள முடியாது என்பதோடு, இலங்கையின் தந்திரமே மீண்டும் வெற்றி கண்டது.

இந்த விடயத்தில் இந்தியாவிற்கு 'எவ்வளவு அடிச்சாலும் தாங்குறான் இவன் ரொம்ப நல்லவன்' என்ற சினிமா வசனம் ஞாபகம் வருகிறது. நாங்கள் எப்படித்தான் சீனாவை ஆதாரித்தாலும் இந்தியா எம்மை பகைக்காது என இலங்கை திடமாக நம்புகின்றது, என வடிவேலு பாணியில்தான் கருத வேண்டியுள்ளது. ஏனெனில் கடந்த ஜூலை 20 ஆம் திகதி கொழும்பில் ஓர் இந்திய அதிகாரியின் கை அடித்து முறிக்கப்பட்ட செயலிற்கு இந்தியாவே கண்டனம் எதுவும் தெரிவிக்கவில்லை. இதனை, இந்தியாவின் பலவீனமாகவும் இலங்கை பார்க்ககூடும்.

சீனாவின் கப்பலை வரவேற்கும் நிகழ்வில் பங்கு கொண்ட சீனத் தூதுவர் கருத்துரைக்கும்போது இது போன்ற கப்பல் வருவது இது 'முதல்தடவை அல்ல' 2014ஆம் ஆண்டும் வந்ததாகக் குறிப்பிட்டார். அத்தோடு இந்தியாவின் எதிர்ப்பினால்தான் தாமதம் ஏற்பட்டதா? என்ற கேள்விக்கு, அது இயற்கையானதே எனவும் பதிலளித்தார்.

காலைக்கதிர்
Kalaikkathir

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## நம்பிய தப்பு தாளங்கள்



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் -99**

சிங்கள அடிமட்டக் காடையர்கள் அரசினால் திட்டமிட்டுக் குடியேற்றப்பட்ட கல்லோயாப் பிரதேசத்தில், 1956இல் ஏற்படுத்தப்பட்ட கலவரங்களைக் கணித்தே தமிழ் மக்கள் விழித்துக் கொண்டிருக்க வேண்டும். பேசிக் கொண்டிருந்த தார்மீகங்களை ஒரேடியாகப் புறந்தள்ளி ஒதுக்காமல், அவற்றைப் பின்தள்ளி, சிங்கள,பௌத்த பேரினவாதத்திற்கு எதிராக நிஜ வாழ்க்கை அரசியலை (Real politik) பேசிக் கடைப்பிடித்திருக்க வேண்டும். அதனைத் தொடர்ந்து ஏற்படுத்தப்பட்ட பண்டா செல்வா ஒப்பந்தம், சிங்கள, பௌத்த பெரும்பான்மையால் கிழித்தெறியப்பட்ட போது – அதுவும், தமிழ் மக்களது பிரதிநிதியும் அதில் கையெழுத்திட்ட நிலையில், அவரிடம் கூட ஒரு பேச்சுக்குக் கேட்காமல் ஒருதலைப்பட்சமாகவே அது கிழிக்கப்பட்ட போது – அவர்கள் தமிழ் மக்களது கோரிக்கைகள் விடயத்தில் எவ்வித மமதையில் நடந்து கொள்வார்கள் என்பதில் விழிப்புக் கொண்டிருக்க வேண்டும்.

அதன்பிறகு எத்தனையோ இணக்கங்கள் காணப்பட்டு, அவற்றில் எவையும் நடைமுறைக்கு வந்ததில்லை.



ஆனால் தேர்தல் காலங்களில் சில சாமரங்கள் வீசப்படும். தேர்தல்கள் முடிந்ததும் காற்று தொடர்ந்து வரும் என நம்பிய தமிழ் அரசியல் தலைவர்கள், தங்கள் துண்டுகளின் முந்தானைகளால் வியர்வையைத் துடைத்ததுதான் மிச்சம்.

அந்தப் புறக்கணிப்புகளையும் அனுராகங்களையும் காட்டித் தேர்தலுக்குத் தேர்தல் வாக்குகள் பெறப்பட்டனவே ஒழிய, யதார்த்தமான அரசியலில் தமிழ் பகுதிகளின் வாழ்வாதாரங்களை மேம்படுத்தவோ, அவர்களின் பிரதேசங்களுக்குத் தன்னிறைவை பெற்றுத்தரும் மார்க்கங்களிலோ விடயங்கள் நகர்த்தப்படவில்லை.

சிறிமாவோவின் ஆட்சி காலங்களில் நாட்டின் பொருளாதாரப் பின்னடைவால் அத்தியாவசியப் பொருள்களுக்குத் தடைகள் விதிக்கப்பட்டு, உள்ளூர் உற்பத்திகள் ஊக்கப்படுத்தப்பட்டு, தமிழர் பிரதேச விவசாயிகள் வெங்காயம், மிளகாய், உருளைக்கிழங்கு போன்ற உற்பத்திகளால் சிறிது உயர்ந்தாலும், சிறிமாவை வீழ்த்த தமிழர் விடுதலைக் கூட்டணி ஜே.ஆருக்கு 1977 ஆம் ஆண்டுத் தேர்தலில் அனுசரணை தந்திருந்தது.

அந்த அனுசரணைக்கு முன்னர் தந்தை செல்வா தனது மரபு உயிலாக தமிழ் மக்களுக்குத் தந்த செய்தியை (19 நவம்பர் 1976 இல் நாடாளுமன்றத்தில் பேசியவற்றை) முன்னைய பதிவில் குறித்து இருந்தேன். வட்டுக்கோட்டைத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டிருந்தது. அமிர்தலிங்கம் 1977 ஆம் ஆண்டு கலவரத்துக்கு பின் பேசியவற்றையும் தந்திருந்தேன்.



தமிழீழம் அமைப்பதற்கான ஆணை பெற்ற தலைவர்கள், விடுதலைக்கான தேவைகளையும் கட்டமைப்புகளையும் நாடாமல்ஜே.ஆருடன்அமைச்சுக்களைப் பெற்று அரசியல்தான் செய்யப் புறப்பட்டார்கள்.

ஆனால் விடுதலைக்காகப் புறப்பட்ட வீரர்களோ அதன் திசைகளில் 'அடித்தால் திருப்பி அடிப்போம்'என்ற யதார்த்தத்தைச் சிங்களப் பேரினவாதிகளுக்கு உணர்த்த, சிங்களப் பேரினவாதிகளும் இதற்கு எதிராகவே தமது திட்டங்களைத் தயாரித்தனர். 'அடித்தால் திருப்பி எதிர்த்தாக்குதல் வரும்' என்பது பேச்சளவில் இல்லாமல், நடத்தையில் உணர்த்தப்பட்டது. தமிழ் மக்களும் 'போராட்டம் வெடிக்கும்' என்ற முழக்கம் வெறும் வாய்ச்சவடால் இல்லை என்பதை உணர்ந்து தலைகளை உயர்த்தி நடந்தார்கள். ஒரு கம்பீரத்தைப் பெற்றார்கள். சர்வதேச நாடுகள் திரும்பிப் பார்த்தன. பேச்சுவார்த்தை மேசைகள் அமைக்கப்பட்டன. அந்த ஆயுதப் போராட்டத்தில் நடத்தப்பட்ட தப்பிதங்களால் அது அழிக்கப்படும் என்ற உள்ளுணர்வுகளால் முற்கூட்டியே 'இலட்சியத்தின் பாதைகள் மாறலாம்; ஆனால் இலட்சியம் மாறாது' என்று பிரபாகரன் கூறிச் சென்றார்.

அவர் மறைந்த சில மாதங்களிலேயே விடுதலைப் புலிகள் உருவாக்கிய கூட்டமைப்பு, 25 வருடங்களின் பின், 1976 இலேயே பொருத்தமற்றது எனத்தான் கைவிட்ட சமஷ்டிதான் தங்கள் தீர்வு என்று மீண்டும் மக்களைக் கூட்டிச் சென்று தேர்தல் அரசியலைத் தொடங்கியது. அந்த அரசியலின் ஒரு கட்டமாக இன்று ஜனாதிபதி ரணில் போடும் திட்டங்களுக்கு ஒத்துழைக்கவும் தயாராக இருக்கிறார்கள் கூட்டமைப்பினர்.

### கானல் தேசமா? முதல் கட்டமா?

1956 இல் தொடங்கி 1976 வரை கோரிக்கைகளாலும் வன்முறைகள் அற்றும் போராடி, சமஷ்டி என்பதால் எந்த உரிமைகளையும் பெறப்போவதில்லை எனத்தீர்மானித்து, தனிநாடாக இறைமை கோரியவர்கள், 25 வருடங்களின் பின் அதன் தலைவர்கள் சமஷ்டி அமைப்புக் கோரிக்கைக்கு, அதற்கு சிங்களப் பெரும்பான்மை இணக்கம் தரும் என இந்தத் தலைவர்கள் அழைத்து வந்திருக்கிறார்கள் என்றால், யாராவது வரலாறுகளில் இருந்து அதனை அரசியல் சாமர்த்தியம் எனப் பாராட்டுவார்களா? அல்லது யதார்த்தத்தின் சாணக்கியம் என பரிந்துரைப்பார்களா? அல்லது வேறு வழியின்றிய கட்டாயம் எனப் பரிகசிப்பார்களா? நடத்தப்பட்ட அணுகுமுறைகளால் சமஷ்டிக்கு கிட்டவான அமைப்பு என ஒன்று ஏற்று நடைமுறைப்படுத்த இணக்கம் வந்தது என அவர்கள் கூறுவார்களா?

இந்திய ஒப்பந்தத்தின் பின் சந்திரிகா காலத்தில் ஓரளவு சமஷ்டியாகப் பார்க்கக் கூடிய அதிகார பரவல்களைத் தந்த கட்டமைப்புகளுக்கு வழி வகுக்கப்பட்டதாயினும், விடுதலைப் புலிகள் அதை ஏற்காததாலும், சிங்கள பேரினவாதத்தின் முகவர்களாக இயங்கிய மஹிந்த ராஜபக்ஷ, விமல் வீரவன்ஸ, சம்பிக்க ரணவக்க போன்றவர்களின் எதிர்ப்பும், அதன் மூலம் தமக்குக் கிடைத்த ஆதரவாலும் அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அதனை நாடாளுமன்றத்திலேயே தீ வைத்துக் கொளுத்தி ஆனந்தம் கண்டார்.

சமஷ்டி அடிப்படையில் தீர்வு ஒன்றை அணுகலாம் என நோர்வேப் பேச்சு வார்த்தைகளில் இணக்கம் காணப்பட்டாலும், சிங்களப் பேரினவாதம் திரும்பவும் அதனை தனது முகவர் மஹிந்த ராஜபக்ஷவின் குழாத்துடன் சேர்ந்து நிராகரித்து, போரை உருவாக்கி, வெற்றியின் பின், திமிர்த்தனத்திலேயே நடந்தது. தொடர்ந்தும் நடந்து, தங்களது வாக்குப் பலத்தினாலேயே மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பெற்று, கோட்டாவை ஜனாதிபதியாகவும் கொண்டு வந்தது.

இடைவெளியில் வந்த நல்லாட்சி காலத்தில் தனது முதுகையும் நேரத்தையும் கொடுத்து சுமந்திரன் ரணிலோடு சேர்ந்து ஒருமித்த, பிரிக்க முடியாத, பிரிக்கக் கூடாத ஒரு நாட்டுக்குள் ஒருவித சமஷ்டித் தோற்றம் கொடுக்கும் அமைப்பில் குடியரசு யாப்பின் நகலை நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பித்தார். ஆயினும் அதனை முன்னெடுத்து நிறைவேற்றிக் கொள்ள ரணிலுக்கு திராணியோ, அவரது பரவணியால் மனமோ இருக்கவில்லை. கடைசி நேரங்களில் அரசின் காலம் முடிந்து தேர்தலைச் சந்திக்க வேண்டும் என்ற நிதர்சனம் வந்ததும் 'இது எங்களது (யு.என்.பியின்) நகல் யாப்பல்ல' என நாடாளுமன்றத்தில் மிக ஸிம்பிளாகக் கூறி விட்டு விலகிச் சென்றார் ரணில்.



அந்தப் பரவணிப் பின்னணியில் ரணில் இன்று சிங்கள, பௌத்த பேரினவாதத்தின் கால்கட்டில் இருந்து கொண்டு, தனது மாமனார் ஜே.ஆர். அபிவிருத்திகளுக்காக அமைத்த பிரதேச சபை முறைகளை முன் வைத்துள்ளார். அவற்றை அதிகாரம்செய்யும்மாகாணஆளுநராகத் தெரிவு செய்யப்படும் 9 பேரில் 5 பேரை மஹிந்தாவின் மொட்டுக் கட்சியிடமும் மற்ற நான்கு மாகாணங்களுக்கும் தானே தெரிவுகளை மேற்கொள்ளுவார் எனவும் பொருந்தி உள்ளார். அவற்றிலும் வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கான ஆளுநர்கள் தெரிவிலும் நியமனங்களிலும் இருவரும் பரஸ்பரம் ஒத்த நிலையில் கையாள்வார்களாம்.





இந்த அரசியல் குட்டைகளிலும் எது விதத்திலும் அதிகாரங்களை ஓர் இனப் பிரச்சினையின் தீர்வுக்கு விட்டுக் கொடுக்க வேண்டும் என்ற மனசாட்சியோ தார்மீகங்களோ இல்லாததால்தான் தமிழ் மக்கள் 35 வருடங்களுக்கு முன்னராகப் பெற்றுக் கொண்டவற்றையாவது தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்ற அறிவுரைகள் வருகின்றன.

சிங்கள பேரினவாதத்தை, யானையின் அம்பாரியிலிருந்து இறக்கிய இந்தியா, சிங்களம், பௌத்தம், ஒரு தேசம் என்ற கோட்பாடுகளில் இருந்து, தமிழர் விடுதலைக் கூட்டணி கோரி இருந்த வடக்குக் கிழக்கு பகுதிகளைத் தமிழ் மக்களுக்கான பாரம்பரிய பிரதேசங்களாக ஏற்று, அவற்றை இணைத்து, சுயாட்சிக்கும் வழி வகுத்தது. அதனை முதற்கட்டமாக அமைத்தது.

ஆனாலும் புலிகள் எடுத்த நிலைப்பாட்டினால் அவை புறந்தள்ளப்பட்டு, அவர்கள் கொடுத்த நெருக்கடிகளுக்குப் பயந்து அடங்கியோ, அதுதான் பாதையென ஏற்றுக்கொண்டோ இருந்த தமிழ் மக்கள், எல்லாவற்றுக்கும் தலையாட்டி கொண்டே வந்தனர். கடைசியில் கானல் தேசத்தைப் பார்த்துவிட்டு, 25 வருடங்களின் பின் சமஷ்டிக்கும் கூடத் தலையாட்டினார்கள்.

இன்றைய அரசியல் களத்தில் நடக்கும் – எடுக்கப்படும் – முனைப்புகளுக்கும் அவர்கள் தலையாட்டவே பழகுகிறார்கள்.

(வளரும்)

காலைக்கதிர் Kalaikkathir

# வடக்கில் போதைப்பொருளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்!

## கலாநிதி ஆறு.திருமுருகன் கோரிக்கை




யாழ். குடாநாட்டில் சமீபத்தில் போதைவஸ்து பாவனை மிக முக்கிய பிரச்சினையாகக் காணப்படுகிறது. கலை, பண்பாடு, பாரம்பரியத்துக்குப் பெயர்போன யாழ்ப் பாணத்தில் போதைப்பொருள் பாவனை தொடர்ந்து கொண்டு இருப்பது மிகக் கவலையான விடயமாகவுள் ளது. எனவே, மக்கள் பிரதிநிதிகள், சமூகத்தலைவர்கள் இதனைத் தடுப்பதற்கு ஒன்று கூடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உப தலைவரும், துர்க்காதேவி தேவஸ்தானம், சிவபூமி அறக்கட்டளை ஆகியவற்றின் தலைவருமான செஞ் சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தெரிவித் தார்.

யாழ்.நல்லை ஆதீனத்தில் இடம் பெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மக்கள் பிரதிநிதிகளோ. கல்விமான்களோ, சமூகப் பொறுப்புணர்வு உடையவர்களோ சரியான முறையில் அக்கறை எடுக்காத காரணத்தால் வடக்கில் இது அதி கரித்துச் செல்கின்றது.

வடக்கைப் பொறுத்தவரை போரால் பல்வேறு இழப் புக்களைச் சந்தித்து வாழ்ந்து வரும் நிலையில் தற்போது போருக்குப் பிற்பாடு பல இளைய தலைமுறைகளை இலக்கு வைத்து போதைவஸ்தின் பயன்பாடு அதிகரித் துச் செல்கின்றது. இதில் இளைய தலைமுறைகள் அநி யாயமாக போதைவஸ்துக்கு ஆளாகி மரணத்தைச் சந் தித்துக் கொண்டு இருக்கிறார்கள். இந்த போதைவஸ்து பாவனை இன்று கட்டுக்கு அடங்காமல் இளைய தலை முறையினரிடத்தே அதிகரித்துச் செல்கின்றது.

யாழிலுள்ள பிரபல்ய பாடசாலைகள் பல்கலைக் கழகங்கள் போன்றவற்றை இலக்காகக் கொண்டுள்ள துடன் மேலும் ஒருசிலவாணிப இடங்கள் போதை வஸ்து இடங்கள் என அடையாளப்படுத்துகின்ற இடங்களாக வும் காணப்படுகின்றன.

இலங்கையில் போதைவஸ்து பாவனையை முழு மையாகத் தடுத்து நிறுத்துவதற்கு வழிகளை கையா ளாவிட்டால் மிகப் பெரிய ஆபத்தை இந்த நாடு சந்திக் கும்.

சமூகத்தின் முக்கியஸ்தர்கள் பொலிஸ் பொறுப்பதி காரிகள், பிரதேச செயலர்கள், மக்கள் பிரதிநிதிகளான நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச சபைகள் இந்த விடயங்கள் தொடர்பாக ஒன்றுகூடி இதுவரை ஓர் ஆக்க பூர்வமான நடவடிக்கை எடுக்காத காரணத்தால் எங்கள் சமுதாயம் மிகக் கேவலமான நிலைக்குச் சென்று கொண்டிருக்கின்றது. போதை கட்டுப்பாட்டு தினத்தில் மட்டும் விழாக்களைச் செய்வதில் அர்த்தம் இல்லை.

வடக்கில் மட்டுமல்ல கிழக்கிலும் மலையகத்திலும் இந்தப் பிரச்சினைகள் காணப்படுகின்றன. இதில் கூடுத லாக தமிழ் இளைஞர்களே பாதிக்கப்படுகிறார்கள். இதற்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவசர மான தீர்மானத்தை ஒற்றுமையாக ஒன்றுகூடி இதனை தடுப்பதற்கு என்ன வழி என இதுவரைக்கும் சரியாக ஆராய்ந்ததில்லை.

வடக்கிலே மிக முக்கியமான ஒரு கூட்டத்தை நடத்தி தமிழர்களுடைய பகுதியிலே அதிகமான அளவில் போதைவஸ்து பாவனை நிலவுவதற்கான காரணங்கள் என்ன எனக் கண்டறிந்து அதைத் தடுப்பதற்கான சரி யான வழியைப் பின்பற்ற அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும். – என்றார்.

# ஐ. நா. சபை ஆசிய பசுபிக் பிராந்திய பணிப்பாளர் யாழ். முதல்வரை சந்தார்!

ஐக்கிய நாடுகள் சபையின் ஆசிய பசுபிக் பிராந்தி யத்தின் பனிப்பாளருக்கு யாழ்ப்பாண மாநகர சபை முதல்வருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பு தொடர்பில் முதல்வர் தெரி விக்கையில் –

பொருளாதார நெருக்கடி மற்றும் யுத்தத்தின் பின் நாட்டில் பல சொத்துக்கள் சேதம் ஆக்கப்பட்டமை வெளிநாட்டில் உள்ள புலம்பெயர்ந்தவர்கள் எமது நாட்டிலே முதலீடுகளை கொண்டு வருகின்றமைக்கு முன்வருகின்ற போதிலும் எமது நாட்டில் உள்ள முரண்பாடான கொள்கைகள் காரணமாக அவர்கள் தமது முதலீட்டை மேற்கொள்ளாத நிலை காணப் பட்டு வருவதாகவும் மாநகர சபை முதல்வர் ஐக்கிய நாடுகள் சபையின் பணிப்பாளரிடம் தெரிவித்தார் எனக் குறிப்பிட்டார்.

மேலும் தற்போது ஆட்சியிலுள்ள ஜனாதிபதி பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி, பிரதமராக பதவி வகித்த காலப் பகுதியிலே ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத்துடன் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதற்கு ஆதரவு தெரிவித்த நிலையில் தற்போது பயங்கர வாதத் தடை சட்டத்தை நடைமுறையில் வைத்திருப் பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்னும் விடயத் தையும் பிரதிநிதிகளிடம் தெரிவித்தார் எனக் குறிப் பிட்டார்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.08.2022இல் வெளியிடப்பெற்றது.